# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

# 2015


පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය

□□

**CONSUMER AFFAIRS AUTHORITY**

# தவிசாளரின் வாழ்த்துச் செய்தி





# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## நோக்கு

ஒழுக்கம் நிறைந்த வியாபார கலாச்சாரமொன்றின் கீழ் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட பாவனையாளர் உலகமொன்றினை அடைதல்

## செயற்பணி

பாவனையாளர் வலுவூட்டுதல் ,வர்த்தக ஒழுங்கு விதிகள் மற்றும் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்தல் என்பவற்றினூடாக பாவனையாளரின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல்

## எமது ஒருங்கிணைந்த நோக்கங்கள்

(1) வியாபார ஒழுங்குபடுத்தல்களினூடாக பாவனையாளரை சிறப்பாக வைத்திருத்தல்

(2) நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளினால் பாதிக்கப்படுகின்ற பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

(3) பாவனையளருக்கு அறிவூட்டுதல் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் ஆகியவற்றினூடாக பாவனையாளரை வலுவூட்டுதல்

(4) வர்த்தக போட்டி எதிர் செயற்பாடுகளுக்கெதிராக வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தலும் போட்டியை ஊக்குவித்தலும்

(5) திறனைக் கட்டியெழுப்புவதனூடாக அதிகாரசபை செயற்திறனை மேம்படுத்தல்

### ஒருங்கிணைந்த நம்பிக்கை கோட்பாடுகள்

- நம்பிக்கை

  செயலாற்றுகையில் நிலைமாறாத் தன்மையினைப் பேணுதலும் நம்பிக்கைத் தன்மையினை உறுதி செய்தலும்.

- நேர்மையும் நல்லிணக்கமும்

அனைத்து நடவடிக்கைகளிலும் உண்மையினையும் நியாயத்தினையும் சரியான நிலைப்பாட்டினையும் கொண்டதாக இருத்தல்

- பொறுப்புடமை

  நிறைவேற்றப்பட்ட அனைத்து செயற்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மையினைப் ஏற்புடமைக்கும் பொறுப்பாயிருத்தல்.

- குழுச் செயற்பாடு

  அனைத்து ஊழியர்களும் ஒவ்வொருவருடனும் முறையான தொடர்பாடல் மற்றும் நெகிழ்வுத் தன்மை என்பவற்றுடன் பரஸ்பர புரிந்துணர்வு, மதிப்பு மற்றும் நம்பிக்கை என்பவற்றினை மேம்படுத்தும் வகையில் இணைந்து செயலாற்றுதல்.

- அங்கீகாரம்

  ஊழியர்களின் மிகச் சிறந்த செயலாற்றலினை மெச்சுதலும் பாராட்டுதலும்.

- இணக்கப்பாடு

  வழங்கப்பட்ட பணியினை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடு.

- ஆக்கபூர்வமான செயலாற்றுகை

  சேவைகளினை வழங்குவதற்கான விருப்பமும் ஆயத்த நிலையும்.

- ஆக்கமும் புத்தாக்கமும்

  அனைத்து விடயங்களிலும் தொடர்ச்சியான மேம்படுத்திலினைப் பெறுவதற்காக புதிய உத்திகளினைக் கண்டுபிடித்தல்.

□□,

□□_□□,

□□,

□□.02

2017.09.18

□□.

ஜ□□,

□□.



ஹசித திலகரத்ன

□□ள□□

□□ரச □□

□□ -2010

□□ளட□□க □□


பக்கம்

□□

1.1 அறி □□க□□ - - - - - - - - 06

□□ரச □□ - - - 07

□□ண□□ - - - - - 08

□□ள□□ அ□□வ□□க□□ □□ர □□ - - - - 08

2. நா □□ ஏ□□? (அதிகாரசபையின் நோக்கங்கள்) - - - 09

□□? (அதிகாரசபையின் தொழிற்பாடுகள்) 09-10

□□ற□□-2015 11-30

5. 2015 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று 31

6. 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானவிரிவான நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று 32

7. 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று 33-40

8. 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 41-53

□□ன 54-59

□ துரைகள்

## 1.1 அறிமுகம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1950 ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பனவற்றினை இரத்துச் செய்து அவற்றிற்குப் பதிலாக ஆக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும்.

இச்சட்டத்தின் முகவுரையின்படி, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஒட்டு மொத்த நோக்கமானது, வர்த்தக ஒழுங்குவிதி, பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளினைச் சீராகப் பேணுதல், நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கெதிராக வர்த்தகர்கள் மற்றும் தயாரிப்பாளர்களைப் பாதுகாத்தல், மற்றும் வர்த்தக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளினூடாக பாவனையாளர்களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பினை வழங்குவதேயாகும். மேலும், பொருட்கள் மற்றும் சேவைகளின் வியாபாரிகள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கிடையே சாத்தியமானதும் ஆரோக்கியமானதுமான போட்டியினைப் பேணும் அதேவேளையில் போட்டி விலையிடலினை ஊக்குவிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.2 அதிகாரசபையின் அமைப்பு விதி

சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, அதிகாரசபையானது சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ள ஆட்களையும் அமைச்சரினால் நியமிக்கப்படும் தவிசாளர் மற்றும் பத்திற்குக் குறையாத எனைய உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

அதிகாரசபையின் உறுப்பினர்கள் – 2015

2015 இன் இறுதியிலுள்ளவாறு பதவிகளை வகித்த உறுப்பினர்களின் பெயர்கள் பின்வருமாறு:

1. திரு.ரூமி மர்சூக் தலைவர் – 2015.06.03 - வரை
2. கலாநிதி.ஆர்.எம்.கே.ரத்நாயக்க தலைவர் – 2015.10.15 - வரை
3. திரு.ஹசித திலகரத்ன தலைவர்

4. திரு.எஸ்.லங்கேஸ்வரா முழு நேர உறுப்பினர் - 2015.12.28 வரை
5. திரு.எச்.எம்.ரிசாந்தி முழு நேர உறுப்பினர் – 2015.12.02 வரை
6. திரு.ஏ.எல்.துல்கார் நஜீம் முழு நேர உறுப்பினர்
7. திரு.எம்.எம்.ஹில்மி முழு நேர உறுப்பினர்
8. திரு.ஏ.எச்.எம். அன்வர் முழு நேர உறுப்பினர்
9. திருமதி.டி.சி.வீஹப்புகொட திறைசேரி பிரதிநிதி
10. திரு.சுரேஸ் பெர்ணாண்டோ உறுப்பினர்
11. திரு.ஏ.எச்.எம்.யூ அருண பண்டார அமைச்சு பிரதிநிதி–10.11.2015 வரை
12. திரு.வீ.எம்.வீரசிங்க அமைச்சு பிரதிநிதி
13. திரு.எம்.ஜீ.ஏ.முஹைமின்உறுப்பினர்
14. திரு.எஸ்.ரீ.அபேகுணவர்தன உறுப்பினர்
15. திரு.சுரேன் வருண் அளவ்வ உறுப்பினர்
16. திரு.அப்துல்லா நஷீர் உறுப்பினர்

## 1.3 அதிகாரசபையின் பதவியினர்

திரு.ரூமி மர்சூக் 2015 ஆம் ஆண்டிலும் தவிசாளராக தனது கடைமைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துள்ளதுடன் திரு.ஹசித திலகரத்ன 2015.11.18 இலிருந்து தொடர்ந்து தவிசாளராக கடமையாற்றியுள்ளார். திரு.ஜே.எம்.ஏ. டக்ளஸ் (இ.நி.சே.– வகுப்பு I) 2012 டிசம்பர் 03 இலிருந்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியுள்ளதுடன் 201511.24 இலிருந்து திரு.அரந்தர அப்பதவியினைத் தொடர்ந்துள்ளார்.

**அதிகாரசபை பிரிவுத் தலைவர்கள்** – 2015

| # | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி. தீப்சி திரேசா<br>M.PA [PIM- சிறி ஜயவர்தனபுர] – சட்டத்தரணி | பணிப்பாளர்<br>இணக்க மற்றும் அமுலாக்கல் |
| 02 | திரமதி. சந்திரிகா திலகரத்ன<br>B.ScAgri (Sp) M.Sc (Mgmt) | பணிப்பாளர்<br>பாவனையாளர் அலுவல்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | தகவல் |
| 03 | திருமதி.சாந்தினி திருநீலகண்டன்<br>[ACEA] | பணிப்பாளர்<br>போட்டி ஊக்குவிப்பு |
| 04 | திரு.டப்.எம்.பிரியந்த<br>MPM, B.Com (Sp) Hons, AIPFM, DPFM | பணிப்பாளர்<br>நிதி |
| 05 | திரு.சம்பத் அங்குலுகஹ<br>B. Com (Sp) Hons, AIPM(SL). Dip in PM | பணிப்பாளர்<br>மனிதவளம் மற்றும் நிருவாகம் |
| 06 | திரு.ரொஹான் மீவனகே குறித்த காலப்பகுதியில் விலையிடல் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளராக தனது கடமைகளினை தொடர்ந்தும் ஆற்றியுள்ளார். | |
| 07 | திருமதி.ரசிகா சாவித்திரி விஜேசேகர<br>B.Sc  Accounting (Sp) Hon USJ, CBA,MAAT | உள்ளக கணக்காய்வாளர் |

## 1.4 பாவனையாளர் அலுவல்கள் பேரவை

இந்தப் பேரவையானது வர்த்தகசார் சட்டத்துறை, வியாபார தொழில்முயற்சி முகாமைத்துவம், வர்த்தக செயற்பாடுகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் ஆகிய துறைகளில் பரந்துபட்ட அனுபவத்தினைக் கொண்ட மூன்று நிபுணர்களினைக் கொண்டதாக தாபிக்கப்பட்டுள்ளது. இது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படும் அனைத்து கோரிக்கைகளினையும் கவனத்தில் கொண்டு அவற்றிற்கான தீர்வினை வழங்குகின்றது. அத்துடன், சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ் போட்டி எதிர் நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் தீர்மானம் நிறைவேற்றுவதற்கும், பிரிவுகள் 19 இன் கீழ் ஆகக்கூடிய சில்லறை விலையினை நிர்ணயிப்பதற்கும் பிரிவு 19 மற்றும் 20 இன் கீழ் ஆகக்கூடிய விலைகள் அறவிடல் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

**<u>பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் உறுப்பினர்கள்</u>**

திரு.சிராஜ் நூர்தீன் - தலைவர்
திரு.டீ.டப்.ஜோன்தாசன் - உறுப்பினர்
திரு.எம்.டி.எம்.ரிஸ்வி - உறுப்பினர்

செல்வி.லேகா அரியரத்ன (சட்டத்தரணி) - பேரவைச் செயலாளர்

## 2. அதிகாரசபையின் நோக்கங்கள்

அ. பாவனையாளர்களின் உயிருக்கும் சொத்துக்கும் தீங்கு விளைவிக்கும் வகையிலான பண்டங்களின் விற்பனை அல்லது அத்தகைய சேவைகளின் வழங்கல்களிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல்

ஆ. நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாப்பதுடன் பாவனையாளர்களின் நலன்களில் கூடிய அக்கறை செலுத்துவதற்கு உத்தரவாதமளித்தல்

இ. இயன்றவரையில் பாவனையாளர்கள் நியாயமான விலைகளில் பொருட்களையும் சேவைகளையும் போதுமானளவில் பற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துதல்

ஈ. நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகள், மட்டுப்படுத்தப்பட்ட வியாபார செயற்பாடுகள் அல்லது வேறுவகையில் பாவனையாளரகள் வர்த்தகர்களினால் சுரண்டப்படுவதற்கு எதிராக நிவாரணம் வழங்குதல்

## 3. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தொழிற்பாடுகள்

1. தொழில் முயற்சியாளர்களுக்கிடையிலான கட்டுப்படுத்தல்கள் அல்லது நீக்குதல்கள

   அ. கட்டுப்பாடான வர்த்தக உடன்படிக்கைகள்
   ஆ.விலை தொடர்பில் தொழில் முயற்சிகளுக்கிடையில் ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்

இ. சந்தையினுள் அல்லது சந்தையின் கணிசமான பகுதியில் உள்நாட்டு வர்த்தகம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான ஆதிக்க நிலையினை துஷ்பிரயோகம் செய்தல், அல்லது

ஈ. உள்நாட்டு அல்லது சர்வதேச வர்த்தக அல்லது பொருளாதார அபிவிருத்திக்கு எதிராக பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஏதாவது போட்டியை கட்டுப்படுத்துதல்

2. போட்டி எதிர் செயற்பாடுகள் மற்றும் ஆதிக்க நிலையினை துஷ்பிரயோகம் செய்தல் என்பன பற்றி புலனாய்வு செய்தல் அல்லது விசாரணை செய்தல்

3. பொருட்கள் சேவைகளை வழங்குவோருக்கிடையில் பயன்தரவல்ல போட்டியை பேணுதலும் முன்னேற்றுதலும் மேம்படுத்துதலும்

4. பாவனையாளர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் பொருட்கள் சேவைகளப்பயன்படுத்தும் ஏனையோர்கள் அத்தகைய பொருட்கள் சேவைகளின் விலைகள், கிடைப்பனவு, தரம் வழங்கப்பட்ட வகை தொடர்பில் அவர்களின் நலன்களை மேம்படுத்துதலும் உரிமைகளை முன்னேற்றுவதும் பாதுகாப்பதும்

5. கொள்வனவுக்கு பயன்படுத்தப்படக்கூடிய பண்டங்களினதும் சேவைகளினதும் தரம், ஆற்றல், தூய்மை, தராதரங்கள் மற்றும் விலைகள் தொடர்பில் பாவனையாளர்கள் அறியும் வகையில் அறியத்தருதல்

6. இச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் பலனாய்வு விசாரணைகளை மேற்கொள்ளுதல்

7. பயனுறுதி குறைந்த போட்டி சந்தைகளில் போட்டி விலைகளை மேம்படுத்துதல்

8. சந்தை நிலமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல், அறிக்கைகளை பிரசுரித்தல் மற்றும் பொது மக்களுக்கு தகவல் கொடுத்தல்

9. அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் வினைத்திறன் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

10. பாவனையாளர்களின் உரிமைகள், சிறந்த உடல் நிலை, இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாவனையாளர் கல்வியினை முன்னேற்றுதல்

11. பிற நிறுவனங்களுடன் சந்தை நிலைமைகள், பாவனையாளர் அலுவல்கள் தொடர்பிலான தகவல் பரிமாற்றத்தினை முன்னேற்றுதல்

12. பாவனையாளர் அமைப்புக்களின் தாபித்தலை மேம்படுத்துதல், உதவியளித்தல் மற்றும் ஊக்குவித்தல்

13. அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைகள் தொடர்பான ஏதேனும் அறவீடுகள் அல்லது கட்டணங்களை விதித்தல்

14. அதிகாரசபையின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வசதிப்படுத்தலுக்கு தேவையாகவுள்ள குழுவை அல்லது குழுக்களை நியமித்தல்

15. அதிகாரசபையின் நோக்கத்தினை அடைவதற்கு தேவையாகவுள்ள ஏனைய நடவடிக்கைகளையும் அதிகாரசபையின் தொழிற்பாடுகளை பயனுறுதியுடன் நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்

## 4. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயல் நிறைவேற்றம்

நிருவாக கட்டமைப்பின்படி, அதிகாரசபையானது 6 பணிப்பாளர்களின் கீழ் தொழிற்படுகின்ற 6 பிரிவுகளினையும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினையுங் கொண்டுள்ளது. அவையாவன;

1) பாவனையாளர் அலுவலகள் மற்றும் தகவல்
2) இணக்க மற்றும் அமுலாக்கல்
3) விலையிடல் மற்றும் முகாமைத்துவம்
4) போட்டி ஊக்குவிப்பு
5) நிதி
6) மனித வளம் மற்றும் நிருவாகம்
7) உள்ளக கணக்காய்வு

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயல் நிறைவேற்றமானது பின்வருமாறு தரப்படுகின்றது;

1. **தீங்கு விளைவிக்கக்கூடிய தரம் குறைந்த பொருட்களுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

**அ**. சட்டத்தின் 10 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

- **பணிப்புரை இல**:53–அனைத்து வியாபாரிகளும், பாவனையாளர்களினால் கொள்வனவின் முன்னதாகவோ / பின்னதாகவோபொருளின் நிறையினை அளவிடுவதற்குக் கோரப்படுமிடத்து, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் அதன் மிகச்சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்ட நிறையிடல் உபகரணத்தினை அவர்களின் கடையில் / விற்பனை நிலையத்தின் முக்கியமான இடத்தில் அல்லது தெரியக் கூடிய இடத்தில் வைத்திருத்தல் வேண்டும்.
- **பணிப்புரை இல**.54–அட்ட பிரிகர, தனிப்பட்ட சிவுர, பத்திரய, பந்தபட்டிய போன்றவற்றின் அனைத்து தயாரிப்பாளர்கள் / விற்பனையாளர்களும் அவர்களின் கடைகளினை புத்த சாசன திணைக்களத்தில் பதிவு செய்திருப்பதுடன் அப்பதிவுச் சான்றிதழினை தமது கடையின் / நிறுவனத்தில் நன்றாக தெரியக் கூடியதான ஓர் இடத்தில் காட்சிப்படுத்தி வைத்தருத்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.
- **பணிப்புரை** 55- அட்ட பிரிகர, தனிப்பட்ட சிவுர, பத்திரய, பந்தபட்டிய போன்றவற்றின் அனைத்து தயாரிப்பாளர்கள் / விற்பனையாளர்களும் அத்தகைய பொருட்கள் தொடர்பான விபரங்களை அவற்றின் மீது அல்லது அத்தகைய பொருள் பொதியிடப்பட்ட உறையின் மீது குறிப்பிடுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.
- **பணிப்புரை இல**:56–இலங்கை கட்டளைகள் நிறுவகத்திடமிருந்து சிறந்த தயாரிப்பு நடைமுறைச் செயற்பாடுகளுக்கான (GMP) சான்றுப்படுத்தலினைப் பெற்றுக் கொண்டாலன்றி, எவரேனும் வியாபாரி, உணவு வழங்குனர், பதப்படுத்திய உணவுகளை வழங்குபவர் மற்றும் / அல்லது வேறு எவரேனும் ஆள், பாரியளவிலான உணவு வழங்கும் மற்றும் / அல்லது வெளியக உணவு வழங்கும் அல்லது அதனையொத்த வியாபாரத்திலீடுபட முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

- **பணிப்புரை இல**.57- இலங்கை தர நிர்ணயத்தின் அடிப்படையில் இலங்கை கட்டளைகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட எஸ்எல்எஸ் உற்பத்திப் பொருள் சான்றுப்படுத்தல் குறியினை அத்தகைய கொள்கலன்கள் / போத்தல்கள் கொண்டிருந்தாலன்றி பொலிமர் மூலப்பொருட்களினால் தயாரிக்கப்பட்ட கொள்கலன்களில் ஏதேனும் பொதியிடப்பட்ட குடிநீர்ப் பொத்தல்களினை தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் எவரேனும் தாயரிப்பது, விநியோகிப்பது, கொண்டுசெல்வது, களஞ்சியப்படுத்துவது அல்லது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்துவது அல்லது விற்பனைக்காக வெளிக்கொணருவது, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ கூடாதென பணிப்புரை விடுக்கின்றது

- **பணிப்புரை இல**:58 – அனைத்து தனியார் சுகாதார நலன் பேணல் நிறுவனங்களும் நோயாளி ஒருவருக்கு செலுத்தப்படும் அனைத்து மருந்துகள் மற்றும் விற்றமின்களின் அவற்றின் பொதுவியல்பான / பண்டப் பெயர் உள்ளடங்கலான அனைத்து விபரங்களும், பெயர், பயன்படுத்தப்பட்ட அளவு போன்றனவும் ஒவ்வொரு மருந்து மற்றும் / அல்லது விற்றமினுக்குமான மொத்தச் செலவு, சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் குறிப்பாக அவற்றின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு உபகரணமும் பயன்படுத்தப்படும் போது ஏற்படும் மொத்தச் செலவு போன்ற விபரங்களை அவர்களின் நிறுவனங்களில் உள்ளக சிகிச்சையினைக் கோருகின்ற அனைத்து நோயாளிகளுக்கும் வழங்கப்படும் பற்றுச் சீட்டு / விற்பனைச் சிட்டைகளில் விபரமாக குறிப்பிடுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

- **பணிப்புரை இல**:59- அனைத்து தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளும், இலங்கை கட்டளைகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட எஸ்எல்எஸ் உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியீடின்றி, வாகன பயன்பாட்டாளர்களுக்கான உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பாதுகாப்பு தலைக்கவசத்தினை தயாரிக்கவோ அல்லது இறக்குமதி செய்யவோ அல்லது விநியோகிக்கவோ, விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைக்கவோ

அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது விற்பனைகாக கோரவோ, மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபடவோ கூடாது எனப் பணிப்புரை விடுக்கின்றது. வாகன பயன்பாட்டாளர்களுக்கான பாதுகாப்பு தலகைகவசத்திற்கான நியம மாதிரி (SLSI 517)

**அ**. சட்டத்தின் பிரிவு20(5)இன் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகள்

- **கட்டளை இல**: 31- 12 பொருட்களுக்கான ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- **கட்டளை இல**: 32– பன்னிரண்டு பொருட்களுக்கான ஆகக்கூடிய சில்லறை விலை ( கட்டளை இல.31 இரத்துச் செய்யப்பட்டது)
- **கட்டளை இல**: 33– சீமெந்துக்கான ஆகக்கூடிய சில்லறை விலை
- **கட்டளை இல**: 34 – பொதியிடப்பட்ட வெள்ளைச் சீனி மற்றும் கருவாடு ஆகியவற்றுக்கான ஆகக்கூடிய சில்லறை விலை
- **கட்டளை இல**: 35–06 பொருட்களுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- **கட்டளை இல**: 36 – புரொயிலர் கோழி இறைச்சிக்கான ஆகக்கூடிய சில்லறை விலை.
- **கட்டளை இல**: 37-05 பொருட்களுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை.

**இ. இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பொருட்களை கண்காணித்தல்**

நாட்டிற்குள் நுழைவு சாவடிகளினூடாக தரம் குறைந்த பொருட்கள் நுழைவதனை தவிர்ப்பதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பரிசோதனைத் திட்டத்தின் கீழ் அத்தகைய 199 சந்தர்ப்பங்களில் இலங்கை கட்டளைகள் நிறுவகமானது அவற்றினை மீள ஏற்றுமதி செய்யும்படி பரிந்துரை செய்துள்ளது.

ஈ. பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கான கொள்கைகள் / சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்த தேசிய குழுக்களினைபிரதிநிதித்துவப்படுத்துதல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சுகாதார அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, சுற்றுப்புறச் சூழல் அமைச்சு, மின்சக்தி மற்றும் வலு அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான தேசியப் பேரவை ஆகிய அமைச்சுக்களின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற தேசிய மட்டத்திலான குழுக்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் பாவனையாளர்களினை பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் சட்டவாக்கங்களினை அறிமுகப்படுத்துவதற்கான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

2. **ஏமாற்று நடவடிக்கைகள் மற்றும் நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

**அ. வர்த்தக சமூகத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

சிவில் சமூகத்தினைச் சென்றடையக் கூடிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நலிவடைந்த குழுக்களினை பாதுகாத்தல், தரமுயர்த்துதல் மற்றும் வலுவூட்டுதல் போன்ற செயற்பாடுகள் போட்டி ஊக்குவிப்பினை ஏற்படுத்துவதற்கான வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கைகளாகும். இது திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட வர்த்தகர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அதிகாரசபையானது வர்த்தக சமூகத்திற்காக 402 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

**அட்டவணை** – 1–அ2015 இல் நடாத்தப்பட்ட வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.

| **மாகாணம்** | **மாவட்டம்** | **வர்த்தகர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்** |
|---|---|---|
| | | **நிகழ்ச்சித்திட்டங்கிள்ன எண்ணிக்கை** |
| மத்திய மாகாணம் | கண்டி | 21 |
| | மாத்தளை | 39 |

| | | |
|---|---|---|
| | நுவரெலியா | 12 |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 30 |
| | மட்டக்களப்பு | 12 |
| | திருகோணமலை | 14 |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | 9 |
| | பொலநறுவை | 5 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 7 |
| | கிளிநொச்சி | 16 |
| | மன்னார் | 18 |
| | முல்லைத்தீவு | 8 |
| | வவுனியா | 17 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 12 |
| | புத்தளம் | 4 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | 11 |
| | இரத்தினபுரி | 13 |
| தென் மாகாணம் | காலி | 19 |
| | ஹம்பாந்தோட்டை | 27 |
| | மாத்தறை | 24 |
| ஊவா மாகாணம் | பதுளை | 8 |
| | மொனராகலை | 25 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 22 |
| | கம்பஹா | 13 |
| | களுத்துறை | 16 |
| **மொத்தம்** | | 402 |

அ. சந்தை திடீர் சோதனைகளும் புலனாய்வு நடவடிக்கைகளும்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின்படி, லேபலில் அறிவித்தல்கள் குறிக்கப்படுவதனை மீறுதல், குறிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக விற்பனை செய்தல், பொருட்களை விற்பனை செய்ய மறுத்தல், பொருட்களினை உரித்துடமையினை நிராகரித்தல், பொருட்களைப் பதுக்குதல், அதிகாரசபையின் எழுத்து மூலமான முன்னறிவித்தலின்றி குறித்த சில் பொருட்களின் மொத்த மற்றும் சில்லறை விலைகளினை அதிகரித்தல், விலை விபரப்பட்டியலினைக் காட்சிப்படுத்தாமை, கொள்வனவாளர்களுக்கு பற்றுச் சீட்டு வழங்காமை, தவறான அல்லது ஏமாற்று நடத்தை மற்றும் தயாரிப்பாளர்கள் / வியாபாரிகளினால் பொய்யான பிரதிநிதித்துவங்களை வகித்தல் என்பனபவற்றினைக் கண்டறிவதற்காக திடீர் சோதனைகள்

மேற்கொள்ளப்படுகின்றன.குற்றமிழைக்கும் வியாபாரிகள்டும். உரிய நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு சட்டத்தின் 60 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் தண்டப்பணம் விதிக்கப்படும்.

**அட்டவணை -2 - சந்தை திடீர் சோதனைகள் மற்றும் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் என்பவற்றின் முன்னேற்றம்**

| **மேற்கொண்ட நடவடிக்கைகள்** (**இலக்கு**) | **திடீர் சோதனகளின் எண்ணிக்கை** | **வழக்குகளின் எண்ணிக்கை** | **விதிக்கப்பட்ட தண்டம்** (**ரூபா**) |
|---|---|---|---|
| **சந்தை திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகள்** | 3,454 | 3,261 | 12,983,420 |
| பிரிவு 10 மீதான சந்தை புலனாய்வுகள் (பிரிவு 10 இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளினை மீறுதல்) | 1,481 | 1,135 | 3,936,370 |
| பிரிவு 11 மீதான சந்தை புலனாய்வுகள் (குறித்துரைக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலையில் விற்றல்) | 119<br>30<br>14 | 82<br>10<br>4 | 347,700<br>21,000<br>8,500 |
| பிரிவு 12மீதான சந்தை புலனாய்வுகள் (நியமங்களுடன் இணங்காமை) | 1<br>27 | 1<br>2 | 5,000<br>2,000 |
| பிரிவு 15 மீதான சந்தை புலனாய்வுகள் | 1,893 | 1,243 | 4,639,200 |
| பிரிவு 16 மீதான சந்தை புலனாய்வுகள் (ஏதேனும் பொருளின் உரித்துடமையை நிராகரித்தல்) | 7,274<br>56 | 6,451<br>26 | 17,626,010<br>72,000 |
| பிரிவு 17 மீதான சந்தை | | | |

| | | | |
|---|---|---|---|
| புலனாய்வுகள் (பொருட்களைப் பதுக்கி வைத்தல்) | 3,418 | 2,829 | 11,653,500 |
| பிரிவு 18 மீதான சந்தை புலனாய்வுகள் (ஆ.சி.விலையினை மீறுதல்) | 2,550 | 2,096 | 11,001,150 |
| பிரிவு 20 மீதான சந்தை புலனாய்வுகள் | 1,387 | 1,467 | 5,660,650 |
| பிரிவு 26 மீதான சந்தை புலனாய்வுகள் (விலைப் பட்டியலினைக் காட்சிப்படுத்தாமை) | 21,704 | 18,607 | 67,956,500 |
| பிரிவு 28 மீதான சந்தை புலனாய்வுகள் (வியாபரிகள் கொள்வனவாளர்களுக்கு பற்றுசீட்டு வழங்குதல்.) | | | |
| பிரிவு 30 மீதான சந்தை புலனாய்வுகள்(தவறான அல்லது ஏமாற்று நடவடிக்கை) | | | |
| பிரிவு 30மற்றும் 31 மீதான சந்தை புலனாய்வுகள் (தவறான மற்றும் பொய்யான பிரதிநிதித்துவம்) | | | |
| பிரிவு 31 மீதான சந்தை புலனாய்வுகள் (பொய்யான பிரதிநிதித்துவம்) | | | |
| மொத்த திடீர் சோதனைகளும் தண்டங்களும் | | | |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்கள் - 2015




புறக்கோட்டை சந்தையில்

காலாவதியான பேரீச்சம்பழங்கள்



காலாவதியான அரிசி இருப்பு மீதான




காலவதியான இனிப்புப் பண்டங்கள் மீதான சோதனை




மனித நுகர்வுக்கு உகந்ததல்லாத ஐஸ்கட்டிகள் சேர்க்கப்பட்ட பழச்சாறுகள் மீதான சோதனை

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட திடீர் சோதனைகள்




## <u>பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள்</u>




3. **நியாயமற்ற வர்த்தகச் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

அ. பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுதல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சட்டத்தின் 13 மற்றும் 32 ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுகின்றது. அதிகாரசபையானது தயாரிப்பாளர் அல்லது வியாபாரியினால் வழங்கப்பட்ட கட்டுறுத்து அல்லது உத்தரவாதத்திற்கு இணங்காத பொருட்களின் விற்பனை அல்லது

சேவைகளின் வழங்கல் தொடர்பான முறைப்பாடுகளினை விசாரணை செய்ய முடியும்.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கையாளப்பட்ட பாவனையாளர் முறைப்பாடுகளின் முன்னேற்றமானது **அட்டவணைகள்** – 3 **மற்றும்** 4 இல் தரப்படுகின்றது.

| | **மொத்தம்** |
|---|---|
| பெறப்பட்ட முறைப்பாடுகள் | 1428 |
| (அ) தபால் மூலம் | 1128 |
| (ஆ) தொலைபேசி அழைப்புக்களின் மூலம் | 602 |
| தடீர் சோதனைகள் (தலைமை அலுவலகம்/மாவட்ட அலுவலகம்) | 311 |
| ஏனைய நிறுவனங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 62 |
| முறையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக | 139 |
| மாவட்ட அலகுகளுக்கு குறிப்பீடு செய்வதன் மூலம் (தனிப்பட்ட நிவாரணத்திற்காக) | 69 |
| நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் | 499 |
| நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 12 |
| நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் | 503 |

(முன்னைய ஆண்டு முறைப்பாடுகள் உள்ளடங்கலாக)

**அட்டவணை** – 4– பாவனையாளர் முறைப்பாடுகள் தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணைகள்:

| **பொது மக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் நடாத்தப்பட்ட விசாரணைகள்** | |
|---|---|
| **விசாரணைகளின் எண்ணிக்கை** | 178 |
| **முன்னைய ஆண்டு / மாதத்திலிருந்தான விசாரணகைளின் தொடர்ச்சி** | 99 |
| **புதிய விசாரணைகள்** | 79 |
| **தீர்க்கப்பட்ட விசாரணைகள்** | 19 |
| **வழங்கப்பட்ட கட்டளைகள்** | 33 |

| அமுல்படுத்தப்பட்ட கட்டளைகள் | 08 |
|---|---|

(முன்னைய ஆண்டு முறைப்பாடுகள் உள்ளடங்கலாக)

திடீர் சோதனைகள் தவிர அதிகாரசபையினால் 24 நீதிமன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் அதிகாரசபை தண்டப்பணமாக ரூபா.793,000 இனை அறவீடு செயதுள்ளது.

**<u>நீதிமன்ற வழக்குகள்</u>**

| **வகையீடு** | 2015 |
|---|---|
| பாவனையாளர் வலுவூட்டல் அலகினால் தாக்கல் செய்யப்பட்ட புதிய வழக்குகள். | 24 |
| விசாரணைக்கு எடுக்கப்பட்டவை | 625 |
| தண்டப்பணங்கள் (நீதிமன்ற வழக்குகளினால் பெறப்பட்டவை) | ரூபா. 793,000/- |
| நடாத்தப்பட்ட வழக்கு விசாரணைகள் | 148 |

4. **பாவனையாளர் அறிவூட்டலும் வலுவூட்டலும்**

அ. பாவனையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பாவனையாளர்களுக்கு அவர்களின் பாவனையாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறையிலுள்ள பாவனையாளர் சட்டம், சிறந்த பாவனையாளரின் பண்புகள் மற்றும் சிறந்த வியாபார செயற்பாடுகள் போன்றவை குறித்து அறிவூட்டுவதற்காக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள், கண்காட்சிகள் போன்றவற்றினைப் பயன்படுத்துகின்றது.மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, பாவனையாளர் உரிமைகள் தினமானது பாவனையாளர் குழுக்கள் மற்றும் வர்த்தக சமூகம் என்பவற்றின் பங்குபற்றுதலுடன் கொண்டாப்பட்டு வருகின்றது.பாவனையாளர் உரிமைகைள் மற்றும் சட்டத்தின் விதிகள் மற்றும்

ஒழுங்குவிதிகள் தொடர்பிலும் நாடளாவிய ரீதியிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

- **அட்டவணை – 5 – பொது மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

| மாகாணம் | மாவட்டம் | பொது மக்கள் நிகழ்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மத்திய மாகாணம் | கண்டி | 28 |
| | மாத்தளை | 18 |
| | நுவரெலியா | 20 |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 58 |
| | மட்டக்களப்பு | 23 |
| | திருகோணமலை | 35 |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | 14 |
| | பொலநறுவை | 15 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 5 |
| | கிளிநொச்சி | 0 |
| | மன்னார் | 8 |
| | முல்லைத்தீவு | 0 |
| | வவுனியா | 15 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 24 |
| | புத்தளம் | 9 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | 36 |
| | இரத்தினபுரி | 15 |
| தென் மாகாணம் | காலி | 16 |
| | ஹம்பாந்தோட்டை | 10 |
| | மாத்தறை | 28 |
| ஊவா மாகாணம் | பதுளை | 13 |
| | மொனராகலை | 17 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 34 |
| | கம்பஹா | 9 |

| | | |
|---|---|---|
| | களுத்துறை | 22 |
| **மொத்தம்** | | |

## அட்டவணை – 6 –பாவனையாளர் அமைப்புக்களைத் தாபித்தல்

| மாகாணம் | மாவட்டம் | பாவனையாளர் அமைப்புக்கள் | | பாடசாலை பாவனையாளர் சுற்றுக்கள் | |
|---|---|---|---|---|---|
| | | தாபிக்கப்பட்ட | பதிவு செய்யப்பட்ட | தாபிக்கப்பட்ட | பதிவு செய்யப்பட்ட |
| மத்திய மாகாணம் | கண்டி | | | | |
| | மாத்தளை | | | | 1 |
| | நுவரெலியா | | | | |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 3 | 1 | 1 | 1 |
| | மட்டக்களப்பு | 9 | 10 | 12 | 16 |
| | திருகோணமலை | 4 | 4 | 9 | 7 |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | | | | |
| | பொலநறுவை | | | | |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | | | | |
| | கிளிநொச்சி | | | 6 | 4 |
| | மன்னார் | | | 4 | 1 |
| | முல்லைத்தீவு | | | | |
| | வவுனியா | 3 | 4 | 3 | 2 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | | | | |
| | புத்தளம் | | | | |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | | | | |
| | இரத்தினபுரி | | | | |
| தென் மாகாணம் | காலி | | 3 | | |
| | ஹம்பாந்தோட்டை | 1 | 1 | | |
| | மாத்தறை | 4 | 14 | | |
| ஊவா மாகாணம் | பதுளை | | | | |
| | மொனராகலை | | | | |
| மேல் மாகாணம் | கொழும்பு | 2 | 1 | 1 | 1 |
| | கம்பஹா | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | களுத்துறை | | 1 | | |
| மொத்தம் | | | **39** | **36** | **33** |

## <u>பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்</u>



பாவனையாளர் உரிமைகள் தொடர்பில் பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்



பாவனையாளர் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் வர்த்தகர்களுக்கு நடமாடும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்



பாவனையாளர் உரிமைகள் தொடர்பில் பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்



பாவனையாளர் உரிமைகள் தினம் தொடர்பில் நடமாடும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல்






பாவனையாளர் உரிமைகள் தினம்
தொடர்பில் நடமாடும் விழிப்புணர்வு

5. **போட்டி எதிர் செயற்பாடுகளுக்கெதிராக வியாபாரிகள் மற்றும் தயாரிப்பாளர்களைப் பாதுகத்தலும் ஆரோக்கியமான போட்டியினை உக்குவித்தலும்**.

**போட்டி ஊக்குவிப்பு**

அதிகாரசபையானது 2015 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 20 இற்கு விசாரணைகளினை நடாத்தியுள்ளது. இவற்றுள் 19 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு தீர்க்கப்பட்டன. ஒன்று (1) போட்டி எதிர் செயற்பாடுகளுக்குரியதென இனங் காணப்பட்டுள்ளதுடன் தீர்மான நிறைவேற்றுவதற்காக பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையானது, பிஸ்கற்றுக்களும் வேபர்ஸ்களும், கோதுமை மா மற்றும் சீனி போன்ற தெரிவு செய்யப்பட்ட பொருட்களில் ஏதேனும் போட்டி எதிர் செயற்பாடுகள் உள்ளனவா என்பது குறித்து மூன்று ஆராய்ச்சிகளினை அதன் சொந்த முயற்சியில் மேற்கொண்டது.

பிஸ்கற்றுக்கள் மற்றும் வேபர்ஸ்கள் தொடர்பான ஆராய்ச்சியில், சந்தையானது இரண்டு தொழிற்பாட்டாளர்களினால் தொழிற்படுத்தப்படுவதுடன் சந்தையினுள் நுழைவதற்கு எவ்வித இடையூறுகளும் காணப்படவில்லை. உள்ளூர் உற்பத்தியாளர்கள் இறக்குமதிகள் மீதான உயர் தரிவு விதிப்பனவிலிருந்து பாதுகாக்கப்படுகின்றார்கள்.ஆதிக்கம் நிறைந்த சந்தை தொழிற்பாட்டாளர்களினால் ஏதேனும் போட்டி எதிர் செயற்பாடுகள உள்ளதற்கான எவ்வித உறுதிப்படுத்திய சான்றும் காணப்படவில்லை.

சீனி ஆராய்ச்சியிலிருந்து போட்டி நடவடிக்கைகளினால் சீனிக் கைத்தொழில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளின் தன்மை மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் பங்கு மற்றும் இது தொடர்பான தீர்வுகளை வழங்குதல் குறித்து நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. நீண்ட கால நோக்கில், சீனிக்

கைத்தொழிலினைப் பொறுத்த வரையில் அரசாங்க ஆதரவின்றி சுயமாகவே தொழிற்படும் ஆற்றலினைக் கொண்டுள்ளது. நடைமுறையில், நாம் பெரும்பாலும் இறக்குமதிகளிலேயே தங்கியுள்ளோம். அவ்வாறே, கோதுமை மா தொடர்பான ஆராய்ச்சியின் மூலமாக, நாடு முழுவதற்குமான கோதுமை மாவின் வழங்கலின் 99% இனை இரண்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலிருப்பதனைக் காண முடிகின்றது. தரவானது இரண்டு நிறுவனங்களின் தனியுரிமை மற்றும் இரண்டு கம்பனிகளின் போட்டி என்பன குறித்த விடயங்களின் விளைவுகளை ஆய்வு செய்யவில்லை.

தரை ஓடுகள் மற்றும் கண்ணாடிப் போத்தல்களின் தயாரிப்புக் கைத்தொழில்களில் காணப்படும் ஏதேனும் சந்தை ஆதிக்க நிலைமையனையும் போட்டு எதிர் நடவடிக்கைகளினை இனங் காண்பதற்காக விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நாம் தற்போதிருக்கினற சந்தை ஆதிக்க நிலையினை இனங்கண்டுள்ளோம். தரை ஓடு தயாரிப்புக் கைத்தொழிலுக்கு இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டுத் தயாரிப்பாளர்களுக்கிடையே கடும் பொட்டி நிலவுகின்றது. கண்ணாடிப் போத்தல் தயாரிப்புத் தொழிலானது தனியார் மயப்படுத்தப்பட்ட தனியுரிமையினைக் கொண்டுள்ளது. அடிப்படையில் இது ஒரு ஆணையிடப்பட்ட முதலீடாக கருதப்படுகின்றது.ஆகையால், போட்டியின்றி ஒட்டு மொத்த மறுசீரமைப்பு இல்லையாகும். இது ஏதேனும் வளர்ச்சியில் விளைவினை ஏற்படுத்த மாட்டாது.

போட்டிச் சட்டமானது அடிப்படையில் பிந்திய அதிகாரங்களைக் கொண்ட மாதிரியாகும். தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள அநேகமான திறந்த பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கின்ற நாம் உலக வர்த்தக நிறுவன சுதந்திரமளிப்பு, இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றில் ஈடுப்பட்டு வருகின்றோம். மேலும், பெரும்பாலான போட்டி விடயங்களில் பகுப்பாய்வு அலகாக கருதிக் கொள்ளப்பட முடியாத சிறிய பொருளாதாரமாக நாம் இருப்பதனை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதொன்றாகும்.

**சந்தைப் பங்கினை இனங் காணுதலும் புள்ளிவிபரத் தரவுகளைச் சேகரித்தலும்**.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சந்தையில் வர்த்தகம் அல்லது சந்தையின் பிரதான பகுதியில் நிலவும் ஆதிக்கத் தன்மையினை கட்டுப்படுத்தும் அல்லது இல்லாமல் செய்யும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. புள்ளிவிபரமானது உள்நாட்டுச் சந்தையில் கிடைக்கக்கூடிய தெரிவு செய்யப்பட்ட பொருட்களுடன தொடர்புடைய

தொழில்முயற்சிகளின் சந்தைப் பங்கினையும் சந்தை ஆதிக்க நிலையினை இல்லாதொழிப்பதற்கான சாத்தியப்பாட்டினையும் அடையாளங் காண்பதற்காக சேகரிக்கப்பட்டுள்ளது.இது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது அத்தகைய துறைகள் மற்றும் கைத்தொழில்களுடன் இணைந்து தொழிற்படுகின்ற சந்தைக் கட்டமைப்புக்களையும் அடையாளங் காண்பதற்கும் துணை புரிகின்றது.ஏறக்குறைய குறித்துரைக்கப்பட்ட 330 கம்பனிகள் உள்ளடங்கலாக குறித்த ஆண்டு காலப்பகுதியில் சந்தைப் பங்குக் கணிப்பீட்டுக்காக வடிவமைக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 40 ஆகும். ஒத்திசைவான சந்தைப் பகுப்பாய்வானது சந்தை ஆதிக்க கருதுகோளுக்கு ஏற்புடையதாகும். சந்தை இனங்காணலானது போட்டியல்லாத பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் மிகவும் இன்றியமையாததாகும்.

## விலைக் கண்காணிப்பும் அவதானமும்

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளினைக் கண்காணிக்கும் பொருட்டு கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் முறையான விலை மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் மீளாய்வு காலப்பகுதியில் 12 கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
உணவுப் பொருட்கள், மரக்கறிகள் மற்றும் மீன் ஆகியவற்றின் நாளாந்த விலைகளின் அடிப்படையிலான விலைப் பகுப்பாய்வு அறிக்கைகள் நாளாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவ்வாறான அறு நூற்றி நாப்பதியேழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## உள்நாட்டுக் கைத்தொழில்களினைப் பாதுகாத்தல்

இனிப்புப் பொருட்கள், சொக்கலேட்டுக்கள், பிஸ்கற்றுகள், கேக் மற்றும் குளியல் சவர்க்காரம் என்பவற்றின் இறக்குமதியாளர்கள் தங்களின் ஆகக்கூடிய சில்லறை விலையினை (MRP) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கின்றன.CESS அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையானது (MRP) சுங்கத் திணைக்களத்தினால் விதிக்கப்படுகின்றது.வெளிப்படுத்தப்பட்ட விலைகளினை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய பொருட்கள் தொடர்பில் சந்தை செவ்வை பார்த்தலின முறையான வெளிப்படுத்தல்நடைமுறையின் அடிப்படையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றது.இந்தக் காலப்பகுதியில் முன்னூற்று நாற்பத்தி நாலு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் மேற்படி இறக்குமதிகளிலிருந்து CESS வருமானமாக ரூபா.1,198,335,712 சேகரிக்கப்பட்டுள்ளது.

## வினைத்திறன் வாய்ந்த தகவல் சேவையினை உறுதி செய்தல்

கையடக்கத் தொலைபேசிகளினூடாக பொருட்களின் சில்லறை விலை தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளுதல் (குறுந்தகவல் குறியீடு 1977).

அதிகாரசபையானது, 1977 எனும் குறுந்தகவல் தொலைபேசி இலக்கத்தினூடாக வழங்கப்படும் சேவையினைக் குறித்த காலப்பகுதியிலும் தொடர்ந்து மேற்கொண்டதுடன் சில்லறைச் சந்தைகளில் நடமாடும் சேவையினூடாக (கொழும்பு புறக்காட்டை, தெமட்டகொட, பொரளை, நுகேகொடைமற்றும் வத்தளை) மரக்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான சில்லறை விலைகள் நாளாந்த அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன. மீன்களுக்கான விலைகள் பேலியகொடை மீன் சந்தையிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. இவை கணனி முறைமையில் நாளாந்தம் பதிவேற்றப்படுகின்றன. இத்தகைய பதிவேற்றத்தின் மூலமாக பாவனையாளர்களும் அவ்வாறே விவசாயிகளும் தமது கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு உதவியாக அமையும்.

## வியாபாரிகள் தொடர்பான தரவுத் தளம்

மாகாண மட்டத்திலிருந்து சேகரிக்கப்படும் தரவுகளினைக் கொண்டு தரவுத்தளம் உருவாக்கப்படுகின்றது. இந்த முயற்சியானது வியாபாரிகளைப் பதிவு செய்யும நடைமுறையினை அமுல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

## ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகள் மற்றும் அக்கறைதார்ர் நிறுவனங்களுடன் வினைத்திறன் வாய்ந்த உறவுகளைப் தாபித்தலும் பேணுதலும்.

01) **மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

அ) சுற்றாடல் பாதுகாப்பிற்கான அமைச்சுக் குழுக்கள்.

- தேசிய நெறிமுறைப்படுத்தல் குழு (பசல் / றொற்றர்டம் /ஸரொக்கொல்ம் மாநாடு / மினமட்ட மாநாடு)
- தேசிய ஒருங்கிணைப்புக்குழு
- தேசிய பசுமை பெறுகைகள் கொள்கை மற்றும் வழிகாட்டிகள்
- தேசிய இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ கொள்கைக் குழு
- உலகளாவிய ஒத்தியல்பான முறைமையினை மீளாய்வு செய்யும் குழு. (HS குறியீடு)

- முகவராண்மைகளுக்கிடையிலான தொழிற்படு குழு. (IAEWG) – SWITCH ASIA நிகழ்ச்சித்திட்டம்.
- நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான கருத்திட்டம்.

அ) மத்திய சுற்றாடல் அதிகாரசபை

- ஒலி முகாமைத்துவம் மற்றும் இரசானயங்களுக்கான தேசிய அமுலாக்கல் திட்ட மீளாய்வுக்குழு
- TACMIC – கைத்தொழில் இரசாயனப் பொருட்களை முகாமை செய்வதற்கான தொழில்நுட்ப மதியுரைக் குழு.

02) **தொலைத்தொடர்பு மற்றும் டிஜிரல் உள்ளக கட்டமைப்பு அமைச்சு**

GIC 1919 இற்கான நெறிமுறைப்படுத்தல் குழுவின் (PSC) உறுப்பினர்

03) **இலங்கைச் சுங்கம்**.

சுங்கங்களுக்கிடையே ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க சம்பரதாஜங்களுடன் ஈடுபடுதல்.

04) வர்த்தகர் சங்கங்கள் மற்றும் கைத்தொழில் மன்றங்கள்

போட்டியனை உறுதிப்படுத்துவதில் கைத்தொழில் துறைக்கு உதவியிளக்கும் பொருட்டு சினேகபூர்வ உறவு முறையினைப் பேணுதல்.

05) **சுகாதார அமைச்சு**

உணவு மதியுரைக் குழுவின் உறுப்பினர்.

## நியாயமான விலையினை உறுதிப்படுத்துதல்

### அ. விதித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலை ஒழுங்குவிதி

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சட்டத்தின் 18, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்ட தத்துவங்களின்

அடிப்படையில் இனங்காணப்பட்ட பொருட்களின் சந்தை விலைகளில் தலையீடு செய்கின்றது. தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் விலைகளை நிலையாகப் பேணுவதற்கு / நிர்ணயிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே **அட்டவணை** – 7 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை – 7–குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் விலைகளை நிலையாகப் பேணுவதற்கு / நிர்ணயிப்பதற்கு பாவனையாளர் அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை**

| பொருள் | எடுத்த நடவடிக்கை |
|---|---|
| சீமெந்து | சீமெந்து தொடர்பான 12 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| முழு ஆடைப் பால் மா | 02 முழு ஆடைப் பால்மா விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| மருந்தாக்கல் | 791 மருந்தாக்கல் பொருட்களுக்கான விண்ணப்பங்களுக்கு தீர வழங்கப்பட்டுள்ளது. |

**இடைக்கால கட்டளைகள்**

| பொருட்கள் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சீமெந்து | 06 |
| மருந்தாக்கல் | 02 |

### ஆ. நிறுவனத்தின் திறன் விரிவாக்கம்

#### அ. பதவியினர் விருத்தி

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது எமது சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புக்களை வழங்குகின்ற முதலீட்டுத் துறையிலுள்ள பதவியினரின் மேம்பாடு குறித்து கூடிய கவனம் செலுத்துகின்றது. 2015 இல் நடாத்தப்பட்ட பதவியினர் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே **அட்டவணை** - 8 இல் தரப்படுகின்றது.

**அட்டவணை – 8 - 2015 இல் நடாத்தப்பட்ட பதவியினர் பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| # | **பாடநெறித் தலைப்பு** | **பங்குபற்றாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனுக்காக ஊழியர்களை விருத்தி செய்தல் மற்றும் திறன் விருத்தி மீதான பயிற்சியிளத்தல் – உயர் முகாமைத்துவ திறன்கள் | 21 |
| 02 | சுய மற்றும் ஊக்குவிப்பு குழுக்களுக்கான சாதக நெறிமுறைகள் மீதான பயிற்சியளித்தல் | 72 |
| 03 | சுப்பர் சந்தைகளுக்கான புதிய பழங்கள் மற்றும் மரக்கறிகள் தயாரிப்பு மீதான பயிற்சியளித்தல் | 05 |
| 04 | புதிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைச் சட்டம் மீதான செயலமர்வு | 04 |
| 05 | 13 ஆவது தென்னாசிய முகாமைத்துவ கருத்தரங்கு 2015 | 01 |
| 06 | பதவியினர் விருத்த நிகழ்ச்சித்திட்டம் - 2015 | 233 |
| 07 | சிறந்த தரத்திற்கான பழங்கள் மற்றும் மரக்கறிகளின் சில்லறை காட்சிப்படுத்தல் | 05 |
| 08 | புதிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைச் சட்டம் மீதான செயலமர்வு | 04 |
| 09 | ஏற்றுமதி / இறக்குமதி நடைமுறைகள் மற்றும் ஆவணப்படுத்தல் | 02 |
| 10 | புலனாய்வு அலுவலர்களுக்கான பதவியினர் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 28 |
| 11 | அழகுசாதன இரசாயனம் தொடர்பான கருத்தரங்கு | 03 |
| 12 | தேசிய மனித வள மாநாடு | 01 |
| 13 | 12 நாட்கள் தமிழ் மொழி நிகழ்ச்சித்திட்டம் | 03 |
| 14 | வெளிச்செல்லும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்சார் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | 44 |
| 15 | செலவினம் மற்றும் கொடுப்பனவு நடைமுறை | 03 |

| | | |
|---|---|---|
| | மீதான பயிற்சி | |
| 16 | 2015 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று தயாரிப்பு | 04 |
| 17 | தேசிய முகாமைத்துவ மாநாடு - 2015 | 03 |
| 18 | 2016 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்ட தயாரிப்பு | 04 |
| 19 | AAT இலங்கை வருடாந்த மாநாடு 2015 | 01 |
| 20 | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக நடைமுறைகள் | 89 |
| 21 | தொழில் சட்டம் மற்றும் கைத்தொழில்சார் உறவுகள் | 01 |
| 22 | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தீர்வுக்கான ஹஷொங் பல்கலைக்கழக கள விஜயம் | 02 |
| 23 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான நிருமாணம் மற்றும் முகாமைத்துவ மொத்த வியாபார சந்தை தொடர்பான கருத்தரங்கு - சீனா | 01 |
| 24 | ஐரோப்பிய ஆசிய நாடுகளுக்கான சீனாவின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு - சீனா | 01 |
| 25 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உணவு பரிசோதனை தொடர்பான கருத்தரங்கு - சீனா | 04 |
| 26 | SAARC – PTB மூன்றாம் தரப்பு மதிப்பீடு மற்றும் தர நிர்ணய முக்கியத்துவம் தொடர்பில் ஒழுங்கமைப்பாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் - இந்தியா | 01 |
| 27 | 04 ஆவது BRICS சர்வதேச போட்டி மாநாடு – தென்னாபிரிக்கா | 02 |
| 28 | பாவனையாளர் சர்வதேச உலக காங்கிரஸ் – 2015 பிரேஸில் | 01 |
| 29 | அடிப்படை ஹலால் உணவுகள் மற்றும் சான்றுப்படுத்தல் முறைமை - மலேசியா | 02 |
| மொத்தம் | | 544 |

ஆ.அதிகாரசபையின் பதவியினர் கட்டமைப்பினை வலுவாக்குதல்.

| சம்பளக் குறியீடு | பதவி | 2011.05.19 இலுள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2015.12.31 இலுள்ளவாறான தற்போதைய பதவியணி |
|---|---|---|---|
| HM 2-1 | **சிரேஸ்ட முகாமையாளர்** | | |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 |
| HM 1-1 | பணிப்பாளர் | 6 | 5 |
| | பேரவை செயலாளர் | 1 | 1 |
| MM 1-1 | **முகாமையாளர்** | | |
| | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 |
| | பிரதிப் பணிப்பாளர் | 15 | 5 |
| | உதவிப் பணிப்பாளர் | | 4 |
| | பிரதி / உதவிப் உதவிப் பணிப்பாளர் - பிராந்திய | 9 | 8 |
| JM 1-1 | கனிஷ்ட முகாமையாளர் | | |
| | முறைமை நெறிப்படுத்துனர் | 2 | 0 |
| | சிரேஷ்ட புலனாய்வு அலுவலர் | 1 | 0 |
| | சிரேஷ்ட புள்ளிவிபர அலுவலர் | 27 | 21 |
| | சிரேஷ்ட சந்தை ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு | 1 | 0 |
| | சிரேஷ்ட கணக்கீட்டு அலுவலர் | 1 | 0 |
| | அந்தரங்க செயலாளர் (ப.நா.) | 2 | 0 |
| | அந்தரங்க செயலாளர் (தவிசாளர்) | 1 | 0 |
| | சிரேஷ்ட நிருவாக / மனத வள அலுவலர் | 1 | 1 |
| | சிரேஷ்ட சட்ட மற்றும் வலுவாக்கல் அலுவலர் | 1 | 0 |
| | சிரேஷ்ட கிரய அலுவலர் | 2 | 1 |
| | | 1 | 0 |
| MA 5-2 | **அமுலாக்கல்தொழிற்பாட்டுவிரிவாக்கல்**/ | | |
| | தரவு ஒருங்கிணைப்பாளர் | 1 | 1 |
| | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் | 1 | 0 |
| | சந்தை ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் | 1 | 1 |
| | ஆவணப்படுத்தும் உத்தியோகத்தர் | 6 | 4 |
| | நூலகர் | 1 | 1 |
| | கிரய உத்தியோகத்தர் | 15 | 3 |
| | கணக்கு உத்தியோகத்தர் | | 9 |
| | நிருவாக உத்தியோகத்தர் | 5 | 5 |
| | சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் | 3 | 2 |
| | புலனாய்வு உத்தியோகத்தர் | 200 | 199 |
| MA 2-2 | **முகாமைத்துவ உதவியாளர்** (**தொழில்நுட்பம்**) | | |
| | கணக்குப் பதிவாளர் | 1 | 0 |

| | | | |
|---|---|---|---|
| MA 1-2 | **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா)** | | |
| | முகாமைத்துவ உதவியாளர் | 31 | 30 |
| PL 3 | **ஆரம்ப மட்ட திறன் விருத்தி** | | |
| | சாரதி | 18 | 15 |
| PL 1 | **ஆரம்ப மட்ட திறன் விருத்தியற்ற** | | |
| | அலுவலக உதவியாளர் | 14 | 13 |
| | **மொத்தம்** | 370 | 331 |

இ. பதவியினர் ஊக்குவிப்பும் நலன்புரியும்

குறித்த ஆண்டு காலப்பகுதியில், பதவியினருக்கு மகிழ்ச்சியானதும் சாதகமானதுமான தொழில் செய்யும் சூழலினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, மருத்துவக் காப்புறுதி திட்டம், சலாச்சார மற்றும் சமயம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள், பதவியினர் உக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பதவியினர் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், ஊழியர் அங்கீகாரம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் பதவியினருக்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

**இ. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்**

பிரதி சட்ட வரைஞர் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் திருத்தங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

## பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் செயல்நிறைவேற்றம் - 2015

பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் நிருவாக செயற்பாடுகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதிகாரசபையினால் குறிப்பீடு செய்யப்படுகின்ற பிரதான போட்டி எதிர் செயற்பாடுகள் தொடர்பில் மீள் புலனாய்வு தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, மிகை விலையிடல், முறையற்ற சந்தை நடவடிக்கைகள் மற்றும் சந்தை முறைமையினைக் கையாளுதல் என்பன விசாரணைக்காக பேரவைக்கு குறிப்பீடு செய்யப்படுகின்றன. தேவைப்படுமிடத்து பேரவையானது விற்பனை செய்யப்படவுள்ள

பொருட்கள் அல்லது வழங்கப்படவுள்ள சேவைகளின் விலைகளினை உயர்த்துவதற்குத் தேவையான பரிந்துரைகளினை வழங்குவதற்கும் தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் / குறித்துரைப்புக்கள்

| **பாஅஅ சட்டத்தின் பிரிவு** | **முறைப்பாடுகள் / குறித்துரைப்புக்களின் எண்ணிக்கை** | **தீர்ப்பனவுகள்/ தீர்மானங்கள்/ பரிந்துரைகள்** |
|---|---|---|
| பிரிவு 38<br>போட்டி எதிர் நடத்தை மீதான முறைப்பாடுகளினை விசாரணை செய்தல் | 01 | தீர்ப்பனவு – 1<br>தீர்மானங்கள் – 1 |
| ஆகக்கூடய சில்லறை விலையினை பரிந்துரை செய்தல் | 5 | 4 |
| சந்தையில் ஆதிக்கம் செலுத்துதல் அல்லது ச்நதை முறைகேடு தொடர்பான முறைப்பாடுகள் | 1 | - |

(முந்திய ஆண்டுகளின் முறைப்பாடுகள் உள்ளடங்கலாக)

பேரவையானது விசேட பணியாக 1977 கருத்திட்டத்தின் நாளாந்த செயற்பாடுகளை கண்காணித்து வருகின்றது.

- விலை இற்றைப்படுத்தல் மற்றும் விலைப் பட்டியலை செவ்வை பார்த்தல்
- பாவனையாளர் முறைப்பாடுகளின் தொகுப்பினை செவ்வை பார்த்தல்
- முறைமையானது சீராகவும் பாவனையாளர் நட்புறவுடனும் தொழிற்படுகின்றதா என்பதனைக் கண்காணித்தல்.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

### 2015 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | 2012.12.31 இலுள்ளவாறு ரூபா 000' | 2014.12.31 இலுள்ளவாறு ரூபா. 000' |
|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 21,765 | 17,593 |
| வியாபார மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் | 17,684 | 16,124 |
| சரக்கிருப்பு / இருப்புக்கள் | 1,253 | 2,110 |
| ஏனைய நடைமுறை நிதிசார் சொத்துக்கள் | 5,343 | 6,138 |
| | **46,045** | **41,966** |
| குறைவேலை (அபிவிருத்திக் கட்டம்) | 1,603 | 1,803 |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | |
| முதலீடு | 195,181 | 168,657 |
| | 17,679 | 16,682 |
| ஏனைய நடைமுறையல்லா நிதிச் சொத்துக்கள் (பதவியினர் கடன்) | 8,288 | 8,221 |
| கட்டிட குத்தகை | 875 | 900 |
| ஆதனம் / பொறி / உபகரணம் | 96,360 | 55,693 |
| | **318,383** | **250,154** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **366,030** | **293,922** |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| சேர்ந்த செலவுகள் | 28,731 | 22,370 |
| செலுத்தத்தக்கவைகளும் ஏனைய பொறுப்புக்களும் | 4,475 | 6,096 |
| | **33,206** | **28,466** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 40,146 | 26,176 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **73,352** | **54,642** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | **292,678** | **239,281** |
| **<u>தேறிய சொத்துக்கள் / உரிமை</u>** | | |
| திரட்டு நிதியம் | 63,191 | 63,191 |
| நீடித்த வருமானம் | 93,201 | 52,535 |
| ஒதுக்கங்கள் | 136,287 | 123,555 |
| **மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமை** | **292,678** | **239,281** |

பங்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் வரையிலான பக்கங்களிலுள்ள குறிப்புக்கள் என்பன இத்தகைய நிதிக் கூற்றுக்களில் முக்கிய பகுதியாகும். இத்தகைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றிற்குபணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.இத்தகைய நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

நிதிப் பணிப்பாளர்
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

பணிப்பாளர் நாயகம்
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

தலைவர்
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## 2015 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி செயலாற்றுகைக் கூற்று

| | 2015.12.31 இலுள்ளவாறு | 2014.12.31 இலுள்ளவாறு |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டுவரும் மானியம் | 287,647 | 249,973 |
| தண்டப்பண வருமானம் | 26,621 | 21,641 |
| ஏனைய வருமானம் | 42,647 | 31,472 |
| | 356,915 | 303,086 |
| **செலவுகள்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | (219,760) | (161,593) |
| பிரயாணச் செலவுகள் | (10,220) | (11,790) |
| வழங்கல்களும் நுகரத்தக்கவைகளும் | (10,369) | (11,199) |
| பேணுதல் | (5,829) | (5,346) |
| ஒப்பந்த சேவைகள் | (42,740) | (44,819) |
| தேய்மானம் | (29,797) | (17,994) |
| ஏனைய தொழிபாட்டுச் செலவுகள் | (25,340) | (27,058) |
| நிதிச் செலவு | (130) | (102) |
| மொத்தச் செலவுகள் | (344,184) | (279,901) |
| | 12,731 | 23,185 |
| **குறித்த ஆண்டுக்கான மொத்த தேறிய மிகை** /(**பற்றாக்குறை**) | 12,731 | 23,185 |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## 2015 டிசம்பர் 31 இலுள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2015<br>ரூபா 000' | 2014<br>ரூபா 000' |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான மிகை / (பற்றாக்குறை) | 12,731 | 23,185 |
| சொத்து விற்பனை இலாபம் /(நட்டம்) | - | - |
| **சீராக்கலுக்காக** | | |
| தேய்மானம் | 29,797 | 17,994 |
| பணிக்கொடை ஏற்பாடு | 14,127 | 5,137 |
| தவணை முறைக் கடன் கரைப்பு | 25 | 25 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படு இலாபம்** | 56,680 | 46,341 |
| செலுத்தத்தக்கவைகளில் குறைவு – குறிப்பு I | 4,740 | 7,003 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு - குறிப்பு II | 96 | 13,648 |
| பணிக்காடை கொடுப்பனவு | (156) | (418) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | 61,359 | 66,574 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (11,368) | (15,911) |
| கற்பனைச் சொத்துக்களின் அதிகரிப்பு (குறைவேலை) | 200 | (382) |
| பணிக்கொடை நிதியத்தில் முதலீடு | (998) | (16,682) |
| முதலீடுகளில் அதிகரிப்பு | (26,524) | (23,286) |
| நீண்ட காலக் கடன்களில் குறைவு (பதவியினர் கடன்) | (68) | 33 |

| | | |
|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | (38,758) | (56,228) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| திறைசேரி மானியம் - மூலதனம் | 11,368 | 12,028 |
| தேய்மானம் | (29,797) | (17,010) |
| நீடித்த வருமானம் | (18,429) | (4,982) |
| பாவனையாளர் பாதுகாப்பு நிதியம் / ஒதுக்கங்கள் | - | 1,454 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | (18,429) | (3,528) |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு** / (**குறைவு**) | 4,172 | 6,818 |
| **ஆரம்ப காலப்பகுதியிலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்** | 17,593 | 10,775 |
| **இறுதிக் காலப்பகுதியிலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்** | 21,765 | 17,593 |

# கணக்குகளுக்கான குறிப்புக்கள்

1. **ஒருங்கிணைந்த தகவல்கள்**

1.1 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1950 ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்(அத்தியாயம்173) என்பனவற்றினை இரத்துச் செய்து அவற்றிற்குப் பதிலாக ஆக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும்.

2011 செப்ரெம்பர் 15 ஆம் திகதிய PED/58/02 ஆம் இலக்கத்தினைக் கொண்ட பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின்படி, ஒழுங்குமுறைப்படுத்தல் முகவராண்மைகளின் உப பிரிவு "அ" இன் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.2 **முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

அதிகாரசபையின் முதன்மைச் செயற்பாடு பாவனையாளர்களைப் பாதுகாப்பதும் வர்த்தகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதுமேயாகும்.

1.3 2015 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அதிகாரசபையின் ஊழியர்களின் எண்ணிக்கை 348 ஆகும்.

1.4 **முக்கியத்துவம் வாய்ந்த பங்குகளை வைத்திருத்தல் (பங்குடமை)/ உரிமைப் பங்கு**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்குத் திறைசேரியே பிரதான நிதியுதவியினை வழங்கி வருகின்றது.அதிகாரசபைக்கான நேரடி வருமானமாகவிருக்கின்ற தண்டப்பண வருமானத்தின் 1/3 இனால் தாபிக்கப்படுகின்ற நிதியத்தின் தேறிய மீதியானது, அதிகாரசபையின் உரிமைப் பங்கிலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

1.5 **அரசாங்க மானியங்கள்**

அரசாங்க மானியங்கள் மானியம் பெற்றுக் கொள்ளப்படுமென்றநியாயமான உறுதிப்படுத்தலின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.செலவின விடயத்துடன் மானியம் தொடர்புபடுகின்ற போது, குறித்த ஆண்டுக்கான வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்துடன் மானியம் தொடர்புபடுகின்றபோது குறித்த சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலத்திற்கு மேற்பட்ட சமமான தொகைகளில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நாணயமல்லாச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் போது, சொத்து மற்றும் மானியம் என்பன பெயரளவிலான தொகைகளில் பதிவு செய்யப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களினால் மறைமுகமான பயன்களைப் பெறுகின்ற வடிவில் எதிர்பார்க்கப்படும் பாவனைக் காலத்தினைக் காட்டிலும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் விடுவிக்கப்பட்டு பெயரளிலான தொகைகளில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியிலான சொத்துக்கள் மற்றும் நாணயமல்லா மானியங்களுடன் தொடர்புடைய அரசாங்க மானியங்கள் நீடித்த வருமானமாக ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் (CAA) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தின் அரச துறை கணக்கீட்டு நியமங்கள் குழுவினால் வழங்கப்பட்ட இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடன்(SLPSAS) இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் வாகனங்கள் தவிர்ந்தவை முகப் பெறுமதி விலையில் கணிப்பிடப்பட்டுள்ளன.

### 2.3 தண்டப் பண வருமானம்

2.3.1 தண்டப் பண வருமானத்திலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் அதிகாரசபையின் பொது செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்படாமையினால், முன்னர் அது வருமானக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இந்த வருமானத்தினை உபயோகிக்கின்றது. எனவே, தண்டப்பண வருமானம் வருமானமாக கருதப்பட்டு அதனுடன் தொடர்புடைய அனைத்து செலவினங்களும் வருமானங்களும் நிதிச் செயலாற்றுக் கூற்றில் காட்டப்படுகின்றது.

2.3.2 அதிகாரசபையானது தண்டப்பணத்தினை வருமானமாகப் பெற்றுக் கொள்ளும் சில சந்தர்ப்பங்களும் உள்ளன. மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் திடீர் சோதனைகளினை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகிளனால் வழங்கப்பட்ட எண்ணிக்கைகளுக்கும் சம்பற்தப்பட்ட நீதிமன்றங்கள் தமு அனுப்புகைகளுடன் வழங்கிய எண்ணிக்கைக்குமிடையில்வேறுபாடுகள் உள்ள அதேவேளையில் அவ்வருமானம் அங்கீகரிக்கப்படாத ஒன்றாகும். அவை உண்மையில் அதிகாரசபைக்கு உரித்தானவையா அல்லது நீதிமன்றத்தினால் தவறுதலாக அனுப்பி வைக்கப்பட்டவையா என்பதனை பரிசீலிக்கும் நோக்குடன் பொதுவாக தொங்கல் – தண்டப்பண வருமானக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. அத்தகைய பணம் வருட முடிவு வரையில் அங்கீகரிக்கப்படாத ஒன்றாக இருப்பின் அது

அதிகாரசபையின் பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைக்கப்படும்.

2.4 **நிதியாண்டு**

அதிகாரசபையின் நிதியாண்டானது ஒவ்வொரு கலண்டர் ஆண்டினதும் டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைகின்றது.

3. **சொத்துக்களும் அவற்றின் பெறுமதி மதிப்பும்**

3.1 **ஆதனம், பொறி மற்றும் உபகரணம**

3.1.1. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த அதன் கணக்கீட்டுக் கொள்கையான கிரய மாதிரியினைத் தெரிவு செய்கின்றது. (SLPSAS 7)

3.1.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றின் ஆக்கக்கூறுகளினைப் பிரதியீடு செய்தல் அடங்கலான தேறிய திரண்ட தேய்மானம், செலவு ஆகியன தொடர்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கொள்விலையில் கூறப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதி பிரதியீடு செய்யப்படும் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, பிரதியீடு செய்யப்பட்ட பகுதியினை அங்கீகரிக்காதுபுதிய பகுதியை அதனுடன் தொடர்புடைய பாவனைக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கின்றது. பழுதுபார்த்தல் மற்றும் பேணுகைச் செலவுகள் என்பன நிகழ்ந்ததாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஏதேனும் மீள் மதிப்பிடல் மிகையானது சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்களிலுள்ள உரிமைப்பங்கில் திரட்டி வைக்கப்படுவதனை அங்கீகரிக்கின்றது.

3.1.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஆகு செலவு / கிரயம் என்பது அதன் பாவனை நோக்கத்திற்காக தொழிற்படு நிலையில் அச்சொத்தினைக் கொண்டு வருவது தொடர்பில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளுடனான கொள்வனவுகள் அல்லது நிருமாணத்தின் கொள்விலையினைக் குறிப்பிடுகின்றது.

3.1.4 சொத்துக்களின் பாவனைக் காலத்தினை அதிகரிப்பதற்கு அல்லது வியாபார நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் வகையில் நிரந்தர அடிப்படையில் சொத்துக்களின் கொள்ளல், விரிவாக்கல் அல்லது

மேம்படுத்தல் நோக்கத்திற்காக ஏற்பட்ட செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது.

3.1.5 வரவு செலவுச் சுற்றறிக்கை இல.150 இன் நியதிகளின்படி, 2015 ஆம் ஆண்டில் காவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வாகனத் தொகுதியினுள் ஒன்பது வாகனங்கள் (ஒரு றொயோட்டா ஹயஸ் வான் மற்றும் எட்டு மிற்சுபிஸி டபள் கப் வண்டிகள்)சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.The invoice value of LKR ரூபா.59,095,110/- பெறுமதியுடைய விலை விபரப்பட்டியலானது நாணயமல்லா மானியமாக கருதப்பட்டு அதற்கமைய கணக்குகளில் சேர்க்கப்பட்டது.

3.1.6 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து அதன் மோட்டார் வகனங்களினைப் பெறுமதி மதிப்பீடு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது. எவ்வாறாயினும், 14 வாகனங்களில் 7 வாகனங்கள் மட்டுமே மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. ஆகையால், மீள் மதிப்பீட்டுச் சீராக்கல்கள் 2015 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்படவில்லை.

3.1.7 **குறைவேலை** (**ரூபா**.1,602,500)

இது கீழே தரப்பட்டவாறான மென்பொருள் விருத்தி மற்றும் அமுலாக்கலுக்காக செலவிடப்பட்ட தொகைகளினைப் பிரதிபலிக்கின்றது.

| | **மதிப்பிடப்பட்ட மொத்த செலவு** (**ரூபா**.) | **பூர்த்தி செய்யப்பட்ட வேலை** (**ரூபா**.) | **பூர்த்தி செய்யப்பட வேண்டிய மீதி** / 31.12.2015 **இலுள்ளவாறு** (**ரூபா**.) |
|---|---|---|---|
| HR **பொதி** | 165,000.00 | 121,250.00 | 43,750.00 |
| **மருந்தாக்கல் மென்பொருள்** | 1,975,000.00 | 1,481,250.00 | 493,750.00 |
| **மொத்தம்** | 2,140,000.00 | 1,602,500.00 | 537,500.00 |

3.1.7.1மருந்தாக்கல் பொருட்களின் விலையிடலுக்காக மென்பொருளொன்றினை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை விருத்தி செய்துள்ளமையினால் மருந்தாக்கல் பொருட்கள் 2014

இலிருந்து பயனுறுதியாகும் வகையில் விதித்துரைக்கப்பட்ட பொருட்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன.

தேசிய ஔடதங்கள் அதிகாரசபையானது மருந்தாக்கல் பொருட்களின் விலைகளினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி தாபிக்கப்பட்டுள்ளது. எனவே, மருந்தாக்கல் பொருட்களின் விலையிடலானது தற்போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, நாம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையுடன் மருந்தாக்கல் மென்பொருளை மாற்றுவது குறித்து கலந்துரையாடல்களை நடாத்தி வந்துள்ளோம். எனவே, மென்பொருளைத் தொடர்ந்து பயன்படுத்துவதில் இடர் காணப்படுவதுடன் கிரயமானது வினைத்திறனற்ற செலவினமாகவும் இருக்கும்.

## 3.2 தேய்மானம்

கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் சொத்து பாவனைக்குட்படுத்தப்படும் மாதத்திலிருந்து ஆரம்பமாகும் வகையில் அதிகாரசபையினால் தேய்மானமிடப்படுகின்றது.

3.2.1 தேய்மானமானது நிலையான அடிப்படையில் அளிக்கப்படுவதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கொள்விலையில் பின்வரும் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கெதிராக பின்வரும் வீதாசாரத்தில் பதிவளிப்புச் செய்யப்படுகின்றன.

அலுவலக தளபாடங்களும் பொருத்துக்களும் 10%

அலுவலக உபகரணம் 10%

கணனி உபகரணம் 20%

கணனி மென்பொருள் மற்றும் இணைய வடிவமைப்பு (கற்பனைச் சொத்து) 20%

மோட்டார் வாகனம் 20%

அலவலக பகுதி பிரிப்புக்கள் 20%

நுகரத்தக்கதல்லாதவை 10%

3.2.2 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வினைக் கணிப்பீடு செய்கின்றது.

3.2.3 நூலக புத்தகங்களுக்கு பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுவதில்லை.

3.2.4 குறித்த ஆண்டுடன் தொடர்புடைய பெறுமானத் தேய்வுப் பெறுமதியானது நீடித்த வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

## 3.3 கட்டிடத் தொகுதி - குருநாகல்

பாவனையாளர் அலுவல்கள் அதகாரசபையின் குருநாகல் மாவட்ட அலுவகத்திற்கென குருநாகல் மாவட்ட செயலகத்தினால் உரித்தளிக்கப்பட்ட கட்டிடத் தொகுதிக்கான ரூபா. 1 மில்லியன் கொடுப்பனவானது 40 வருட காலப்பகுதிக்கு சமமான தவணைக் கட்டணங்களில் கொடுப்பனவு செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 3.4 கடன்பட்டோரும் பெறத்தக்கவைகளும்

கடன்பட்டோர் மற்றும் பெறத்தக்கவைகள் அவை தேறக்கூடிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுகின்ற தொகையில் குறிப்பிடப்படுகின்றன.

3.5 கையிருப்புக்கள் குறைந்த கொள்விலை அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இரண்டில் எது குறைவோ அதன் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன.

## 3.6 காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் குறுகிய கால முதலீடு என்பவற்றினைக் குறிப்பிடுகின்றது.

3.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளிலுள்ள காசு என்பவற்றினைக் குறிப்பிடுகின்றன.

## 3.7 நிலையான சொத்துக்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் முதலீட்டின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது கடந்தக காலங்களில் நிலையான சொத்துக்களினை குறித்த காலப்பகுதியினுள் மீளப் பெறுவதில்லையென்பதால் பெரும்பாலான நிலையான சொத்துக்கள் குறைந்தது 3 வருடங்களேனும் தொடர்ந்து இருக்குமென கருதப்படுகின்றது.நிலையான சொத்துக்கள் ஆரம்பத்தில் கொள்விலையிலேயே கணிப்பீடு செய்யப்படுகின்றன.

## 4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 4.1 செலுத்தத்தக்கவைகள்

செலுத்தத்தக்கவைகள் அவற்றின் கொள்விலையில் தரப்படுகின்றன.

### 4.2 இழைப்பாறல் பயன் கடப்பாடு

பாவனயாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பங்களிப்புச் செய்யப்பட வேண்டிய இரண்டு வரையறுக்கப்பட்ட பயன்களைக் கொண்ட இழைப்பாறல் திட்டங்களைக் கொண்டுள்ளது.

#### 4.2.1 வரையறுக்கப்பட்ட இழைப்பாறல் திட்டம் – பணிக்கொடை

பணிக்காடையானது ஓர் வரையறுக்கப்பட்ட இழைப்பாறல் திட்டமாகும். அதிகாரசபையானது இயைபான நியதிச்சட்டங்களின் நியதிகளின்படி பணிக்கொடையினைச் செலுத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்ததாகும். இந்தப் பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு சேவையின் முதலாவது ஆண்டிலிருந்து ஆரம்பித்து சேவை நிறைவடையும் ஒவ்வொரு ஆண்டுக்கும் அனைத்து ஊழயர்களினதும் நிதியாண்டின் இறுதி மாதத்தின் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தொகைக்குச் சமமான தொகை ஐந்தொகையில் முன்கொண்டு வரப்படுகின்றது. ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டு வரப்பட்ட ஏற்பாட்டுக்கும் ஆண்டின் இறுதியில் முன்கொண்டு செல்லப்படுகின்ற ஏற்பாட்டுக்கும் இடையிலான வேறுபாட்டின் விளைவானது வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றது.

**பணிக்காடைகான ஏற்பாடானது** பணிக் கொடைச் சட்டத்தின் நியதிகளின்படி, ஒரு வருட சேவைக்காலத்தினுள் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்காக கணிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2015.12.31 இலுள்ளவாறு 1 வருட காலப்பகுதிக்கு மேற்பட்ட காலப்பகுதியினைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கான திரண்ட ஏற்பாடு, ரூபா. 40,146,165.88 ஆகும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பணிக்கொடை ஏற்பாட்டிற்கு முதலீடு செய்வதற்கான அங்கீகாரத்தினை வேறாகப் பெற்றுள்ளதுடன் பணிக்கொடைக்கான முதலீடு ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள ஊழியர்களுக்கு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.2015.12.31 இலுள்ளவாறான பணிக்கொடை முதலீட்டுப் பொழிப்பானது கீழே தரப்படுகின்றதுடன் மீதியானது முதலீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

**ரூபா**.

5 வருடங்களுக்கு மேற்பட்ட ஊழியர் சேவைக்கான பணிக்கொடை ஏற்பாடு 35,652,276.00

2015.12.31 இலுள்ளவாறான

2015.12.31 இலுள்ளவாறான முதலீடு 16,681,743.00

2015.12.31 இலுள்ளவாறு முதலீடு செய்யப்பட வேண்டிய மீதி

18,970,533.00

பொதுத் திறைசேரியினால் போதுமான நிதி விடுவிக்கப்படாமையினால் முதலீடு செய்யப்பட வேண்டிய திரட்டு மீதியானது மேலும் அதிகரித்துள்ளது.

4.2.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் / ஊழியர் செமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

அனைத்து ஊழியர்களும் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிக்கு உரித்துடையவர்களாவர். ஊழியர்களினால் பங்களிப்புச் செய்யப்படும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பானது வருமானக் கூற்றில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு ஊழியரின் மொத்த உழைப்பூதியத்தில் முறையே 15% மற்றும் 3% பங்களிப்பினை வழங்குகின்றது.

## 5. வருமானம்

### இறைவரி அங்கீகாரம்

இறைவரியானது பாவனையாளர் அலவல்கள் அதிகாரசபைக்கு சென்றடையும் சாத்தியப்பாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றதுடன் இறைவரியானது நம்பகமாக அளவிடப்படக் கூடியதொன்றாகும்.

## வட்டி வருமானம்

நிலையான வைப்புக்களுகான வட்டி வருமானமானது பெயரளவிலான வட்டி வீதத்தினைப் (NIR) பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது. நிலையான சொத்துக்களின் சராசரி வட்டி வீதம் 6 ஆகும். ஆகையால், ஆண்டுக்கான வட்டி வீதம் முன்னைய ஆண்டிலும் பார்க்க குறைவாகும்.

## பாவனையாளர் மானியங்கள்

கொடைகள் கிடைக்கப்பெறும் என்பதற்கான நியாயமான உறுதியுரை மற்றும் அதனுடன் இணைந்த நிபந்தனைகள் இணங்கியொழுகப்படும் என்பன உள்ள இடங்களில் அரசாங்க மானியங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. செலவின விடயம் (மீண்டுவரும் மானியம்) ஒன்றுடன் மானியங்கள் தொடர்புறும் வேளையில், அது அக்காலப்பகுதிக்கான வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்து விடயத்துடன் (மூலதன மானியம்) மானியங்கள் தொடர்புறுகின்ற போது அதன் நீடித்த வருமானமாகவும் சம்பந்தப்பட்ட சொத்தின் ஆயுட் காலத்தின் போதான சமவளவில் விடுவிக்கப்பட்ட வருமானமாகவும் அங்கீகரிக்கப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாசபை கண்காணிக்கப்படாத கொடைகளினைப் பெறும் போது, சொத்துக்களும் கொடைகளும் பெயரளவிலான தொகைகளில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்டு, சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட (உத்தேசிக்கப்பட்ட) ஆயுட் காலம் தொடர்பாக வருமானக் கூற்றில் இடப்படுகின்றது.(ஐஏஎஸ் 20)

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } ரீசீஎம்/ம/சீஏஏ/1/15    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2016 ஒக்தோபர் 11

தலைவர்,
நுகர்வோர் விவகார அதிகாரசபை.

**நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 13,875,000 கிரயத்திலான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2003 இன் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவு | நுகர்வோர் அதிகாரசபைக்கு புலனாய்விற்காக அனுப்பிவைக்கப்பட்ட விடயமொன்று 02 மாதங்களுக்குள் புலனாய்வு செய்து அதன் அறிக்கை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தனியார் சுகாதார சேவைகள் நிறுவனங்கள் மூலம் நோயாளிகளுக்காக மேற்கொள்ளப்படும் ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் மருத்துவ |

| | |
|---|---|
| | ஆலோசனை சேவைகள் என்பவற்றிற்காக அதிக கட்டணங்கள் அறவிடுவது தொடர்பில் புலனாய்வு செய்வதற்காக நுகர்வோர் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அப்புலனாய்வு அறிக்கை கணக்காய்வு திகதியான 2016 யூன் 15 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தரொரு வரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,119 தொகையான கடன் மீதி மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த 04 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 324,616 தொகையான கடன் மீதிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 12,730,639 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 23,184,968 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,454,329 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மானியங்கள் ரூபா 37,674,564 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 11,174,528 ஆலும் அதிகரித்திருந்த போதிலும், ஆளணி சம்பளங்கள் ரூபா 58,167,187 ஆலும் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சி தொடர்பில் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியான நிதி மிகையொன்று காணப்பட்ட போதிலும், அது வருடாந்தம் தளம்பல் அடைந்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போதான ரூபா 131,429,112 தொகையான அதிகாரசபையின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் அது ரூபா 262,287,710 ஆக இருந்தது.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- நுகர்வோரின் உயிர் மற்றும் ஆதனங்கள் என்பவற்றிற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் சேவை வழங்குவதற்கும் எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்
- அசாதாரண வர்த்தக முறைகளுக்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல் மற்றும் நுகர்வோரின் உரிமைகளுக்கு உரிய கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்துதல்.
- முடியுமான வரையில் நுகர்வோருக்கு போட்டி விலையில் பொருட்கள் சேவைகளுக்கு போதியளவு நுழைவுகளை வழங்குவதை உறுதிப்படுத்துதல் மற்றும்
- அசாதாரண வியாபார நுழைவுகள் மட்டுப்படுத்தப்பட்ட வியாபார நுழைவுகள் அல்லது வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் வேறு ஏதேனும் முறையிலான நுகர்வோர் பாதுகாப்பிற்கு எதிராக உதவி வழங்குதல்

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) மேற்கத்திய மருந்துகளுக்கான விலைக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 மார்ச் 04 ஆந் திகதிய 1852/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சகல மருந்துகளும் "அத்தியவசிய பொருட்களாக" குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அதிகாரசபை ஸ்தாபித்தல் அதிகாரச்சட்டத்தின் 18(2) பிரிவின் பிரகாரம் மருந்துகளின் விலையை அதிகரிப்பதற்கு முன்னர் அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மருந்துகளை விற்பனை செய்யக்கூடிய விலை தீர்வையற்ற இறக்குமதி விலையில் ஆகக்கூடியது (C.I.F) 65 சதவீதத்திற்கு

மட்டுப்படுத்தும் முறைமையொன்று அதிகாரசபையிடம் காணப்பட்ட போதிலும், மருந்துகள் அத்தியவசிய பொருளொன்றாக நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு முன்னர் கம்பனிகள் அதிகளவில் 65 சதவீதம் முதல் 937 சதவீதம் வரையான வீச்சில் மருந்துகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகரிக்கப்பட்ட விலையை மீண்டும் 65 சதவீதம் வரைக் குறைப்பதற்கு அதிகாரசபைக்கு நுகர்வோர் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தினால் அதிகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ii) அரச மருத்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் மருந்துகள் விற்பனையில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளுக்காக விலைகளை அதிகரிப்பதற்கு அதிகாரசபையின் அனுமதி கோரப்பட்டிருந்தது. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தீர்வையற்ற இறக்குமதி விலையில் 50 சதவீதத்திற்கும் 53 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிலும் ஏனைய மருந்து விற்பனையில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் தீர்வையற்ற இறக்குமதி விலையில் 62 சதவீதம் முதல் 64 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் வரும் வகையில் தமது சில்லறை விலையை வைத்து அச்சில்லறை விலை சந்தையில் அமுல்படுத்துவதற்கு அதிகாரசபையின் அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது. இங்கு மருத்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் மருந்துகள் விற்பனையில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் என்பவற்றிற்காக ஒரே விலை வீச்சொன்று செயற்படுத்தாமல் மருந்துக் கம்பனிக்களுக்காக மாத்திரம் அதிக சில்லறை விலையை பேணிச் செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தனியார் சுகாதார சேவை நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் சேவைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 யூன் 11 ஆந் திகதிய 1918/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சகல தனியார் சுகாதார சேவை நிறுவனங்களிலும் உள்ளக சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகள் மற்றும் அந்த நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற சகல மருத்துவ உபகரணங்கள் மற்றும் அவை பயன்படுத்தப்பட்ட அளவு தொடர்பான விபரமான கிரயம் அடங்கிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பட்டியல் வழங்கப்பட வேண்டுமென நியதிகள் விதிக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 யூன் 15 ஆந் திகதி வரையிலும்

அந்நியதிகள் முறையாக செயற்படுத்தப்படுகின்றதா என பரீட்சித்துப் பார்ப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நாடு பூராகவும் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலைகள் மூலம் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்ற 33 ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக சுகாதார சேவை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையால் விதிக்கப்பட்ட குறைந்த மற்றும் கூடிய விலைக்கு இடையே பாரியளவு விலகல் காணப்பட்டது. இதன் பிரகாரம் அந்நிறுவனங்களுக்கு நோயாளர்களிடமிருந்து ஆகக்கூடிய விலை அளவுகளை அறவிடுவதற்கு இயலுமாக இருந்தது. எனினும் நுகர்வோரைப் பாதுககாப்பதற்கு இதற்காக அதிகாரசபையின் ஈடுபாடொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) அரிசிக்கான விலைக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் போது அரசின் மூலம் ஒரு கிலோ கீரி சம்பா மற்றும் சம்பா நெல்லிற்காக ரூபா 50 உம், ஒரு கிலோ நாட்டு நெல்லிற்காக ரூபா 45 உம் உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவ்விலைகளின் அடிப்படையில் அதிகாரசபையால் அரிசிக்காக கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படாதிருந்தமையால் சந்தையில் அரிசி விலைகள் அதிகரித்திருந்தன.

(ஈ) சிறுவர் பால் உணவு விலைக்கட்டுப்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிறுவர் பால் உணவுகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2012 யூன் 18 ஆந் திகதி விநியோகித்த 1763/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காணப்பட்ட குறைபாடு காரணமாக புதிய வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுமாறு 2013 சனவரி 04 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் அதிகாரசபைக்கு அறிவித்திருந்தது. அதன் பிரகாரம் 2013 யூலை 10 ஆந் திகதி 1818/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மேற்படி வர்த்தமானி அறிவித்தல் இல்லாமல் செய்யப்பட்டிருந்த போதிலும் இவ்விடயம் மீண்டும் புலனாய்வு செய்து புதிய வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மேற்படி வர்த்தமானி அறிவித்தலை அகற்றியதுடன் சிறுவர் பால்மா உணவை இறக்குமதி செய்யும் சில கம்பனிகள் இறக்குமதி விலைக்கு (C.I.F பெறுமதிக்கு) 72 சதவீதம் முதல் 235 வரையான

விச்சில் சில்லறை விலை தீர்மானிக்கப்பட்டு சந்தையில் அதிகளவு இலாபத்தை ஈட்டி வந்தன. இந்நிலைமை தொடர்பாக விலை மற்றும் முகாமைத்துவ பிரிவின் மூலம் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது நுகர்வோர் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சிறுவர் பால் உணவினை இறக்குமதி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் கம்பனியால் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு பால்மா வகைகளில் இறக்குமதி விலையிலிருந்து சில்லறை விலை வரை விலை நிர்ணயிக்கப்பட்ட விதம் தொடர்பாக போதியளவு தகவல்களைப் பெற்றுக்கொண்டு அது தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொள்ளாமல் இறக்குமதி மாதிரிப்பட்டியல் மற்றும் சுங்க தீர்வைப் பத்திரங்கள் என்பவற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு விலை தொடர்பாக புலனாய்வொன்றை செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கொழுப்பற்ற பால்மா விலைக் கட்டுப்பாடு

அதிகாரசபையால் கொழுப்பற்ற பால்மாவிற்காக கட்டுப்பாட்டு விலை விதிப்பதற்கு கணக்காய்வு திகதியான 2016 யூன் 15 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் இப்பொருள் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் அதிகாரசபையின் அனுமதியின்றி அவர்களின் தற்றுணிவின் பேரில் பொருட்களின் விலை பேணப்பட்டு வந்தது.

(ஊ) பெற்றோலிய எரிவாயு விலைக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபை மற்றும் 02 எரிவாயுக் கம்பனிகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட விலை சூத்திர உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒருமுறை குறித்த கம்பனியால் 12.5 கிலோ கிராம் வீட்டுச் சமையல் எரிவாயு கொள்கலனொன்றின் விலை நிர்ணயிக்கப்பட்ட முறை அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு 30 நாட்களுக்குள் விலைத் தளம்பல் தொடர்பான தீர்மானமொன்று வழங்கப்பட வேண்டும். இதன் போது ஒரு கம்பனி 2012 நவம்பர் மாதத்தின் பின்னரும் மற்றைய கம்பனி 2015 மே மாதத்தின் பின்னரும் எவ்வித தகவல்களும் அதிகாரசபைக்கு

வழங்கப்படாதிருந்த போதிலும், அது தொடர்பாக அதிகாரசபையால் கண்காணிப்பு நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் விலை சூத்திரத்தின் பிரகாரம் எரிவாயு விலை தீர்மானிக்கப்படாதிருந்ததுடன், 3 சந்தர்ப்பங்களின் போது திறைசேரியால் சமையல் எரிவாயு விலை தீர்மானிக்கப்பட்டு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டு அதிகாரசபை மூலம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(எ) **விசுகோத்து விலைக்கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் அதிகாரசபையின் போட்டியை மேம்படுத்தும் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசுக்கோத்து உற்பத்தி தொடர்பான ஆய்வின் போது விசுக்கோத்து கைத்தொழிலில் ஈடுபடும் 02 பிரதான கம்பனிகள் விற்பனையை அதிகரிப்பதற்காக போட்டி ரீதியான விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் சில்லறை வியாபாரிகளுக்கு கூடிய கழிவினை வழங்குதல் மற்றும் கம்பனியால் கூடுதலான இலாப எல்லையை பேணுவதால் விசுக்கோத்துக்களின் விற்பனை விலை அதிகரிப்பு இடம்பெறுவதாகவும் சமமான அளவில் உள்ள சம வகையான உற்பத்திகள் வெவ்வேறு விலைகளில் நுகர்வோருக்கு விற்பனை செய்வது அவதானிக்கப்பட்டிருந்தது. இதனால் விசுக்கோத்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்திற்கு உட்படுத்தி அத்தியவசியமான பொருளொன்றாக மாற்றப்பட வேண்டுமென அதன் ஆய்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், நுகர்வோர் அதிகாரச்சட்டத்தின் 19 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இவ்விடயத்தை புலனாய்வு செய்வதற்காக நுகர்வோர் சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

(ஏ) **முச்சக்கர வண்டிக் கட்டண கட்டுப்பாடு**

முச்சக்கர வண்டி சாரதிகள் தரமில்லாத மீற்றர்களைப் பொருத்துதல் மற்றும் மீற்றர் மூலம் காண்பிக்கப்படும் கட்டணங்கள் பிரயாணம் செய்த தூரத்தின் பிரகாரம் நியாயமாக இல்லாமை, ஒரே தூரத்திற்கு ஒவ்வொரு சாரதியும் வெவ்வேறு கட்டணங்களை அறவிடுவது, மழையுடன் கூடிய நாட்கள் மற்றும் இரவு காலங்களில் கூடுதலான கட்டணங்களை அறவிடல் மற்றும் எரிபொருள் விலை குறைவடைந்த போதும் கட்டணங்களைக் குறைக்காமையால் முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தும் நுகர்வோரிடமிருந்து அசாதாரண கட்டணங்கள் அறவிடப்பட்டு வந்தன. நுகர்வோருக்கு சேவைகள் வழங்கும் போது ஏதேனும் ஒரு வகையில் நுகர்வோரைச் சுரண்டுதல் இடம்பெறும் போதும் அசாதாரண விலை

பேணிச்செல்வதன் மூலம் அது கூடுதலான நுகர்வோர் தொகுதியொன்று தொடர்பில் கருத்திற் கொள்ளக்கூடியளவில் தாக்கமளிக்கும் போது இது தொடர்பாக அதிகாரசபையால் புலனாய்வை மேற்கொண்டு சட்டவிதிகளை வழங்கி நுகர்வோர் பாதுகாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) குடிநீர் போத்தலுக்கான விலைக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நுகர்வோரின் சுகாதார பாதுகாப்பிற்கு ஏதேனும் சேதமொன்று ஏற்படக்கூடிய பொருளொன்று தொடர்பாக செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு அதிகாரச்சட்டத்தினால் உரித்தாகியிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து பெற்றுக்கொண்ட 29 குடிநீர் போத்தல்கள் இரசாயன மற்றும் பௌதீக பரிசோதனைக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அதில் 25 குடிபோத்தல்கள் உணவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தரமற்றதாக இருந்தமை 2015 யூலை மாதத்தின் போது கிடைத்த அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது, அக்குறைபாடு தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அறிக்கை கிடைத்து 07 மாதங்கள் கடந்ததன் பின்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குடிநீர் போத்தல் தொடர்பாக விலைக் கட்டுப்பாடொன்றை மேற்கொள்வதற்காக அதிகாரசபையின் நுகர்வோர் சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த புலனாய்விற்கு உரித்தாக 2014 யூலை 30 ஆந் திகதி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த புலனாய்வு அறிக்கையில் அந்தந்த நீர் அளவினைக் கொண்ட போத்தல்களுக்காக நிர்ணயிக்கப்பட வேண்டிய கூடிய சில்லறை தொடர்பாக பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு திகதியான 2016 யூன் 15 ஆந் திகதி வரை நீர் போத்தல் தொடர்பாக விலைக்கட்டுப்பாடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) கோதுமை மா விலைக் கட்டுப்பாடு**

2004 மே 26 ஆம் திகதிய 1342/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கோதுமை மா அத்தியாவசியப் பொருள் என அதிகாரசபையின் விலைக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்ததுடன், 2015 மார்ச் 19 ஆந் திகதிய 1906/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பொதி செய்யப்படாத 01 கிலோ கிராம் கோதுமை மா ரூபா 87 என விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக சந்தையில் பொதி செய்யப்பட்ட 01 கிலோ கிராம் கோதுமை மாவின் விலை ரூபா 108 முதல் 115 வரையான விலை வீச்சில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், பொதி செய்யப்பட்ட கோதுமை மாவிற்கு விலை கட்டுப்பாடொன்றை மேற்கொள்வதற்கு 2016 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஓ) நுகர்வோர் சேவைகள் தகவலறி செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நுகர்வோர், அதிகாரசபைக்கு துரிதமாக முறைப்பாடுகளை முன்வைப்பதற்காகவும் நுகர்வோருக்கும் விவசாயிகளுக்கும் சந்தையில் மொத்த மற்றும் சில்லறை விலைகளை அறிந்து கொள்வதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 9,188,369 தொகை செலவிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்த 1977 - நுகர்வோர் சேவை தகவலறியும் செயற்திட்டத்தின் ஊடாக முறைப்பாடுகளை முன்வைக்கும் போது அதிகாரசபையின் உத்தியோகத்தரொருவரை உடனடியாக தொடர்புகொள்ள முடியாமல் இருப்பதும், கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஒலிப்பதிவு செய்வதற்காக தொடர்புபடுத்துவதும் அதற்காக நுகர்வோர் காண்பித்த விருப்பின்மை காரணமாக இம்முறைமையின் கீழ் நுகர்வோர் முறைப்பாடுகளை முன்வைத்தல் வெற்றியளிக்கவில்லை.

(ii) இந்த அவசர அழைப்பு இலக்கத்தினூடாக நுகர்வோருக்கும் விவசாயிகளுக்கும் 07 பொருளாதார நிலையங்களிலும், 05 பிரதான சந்தைகளிலும், லங்கா சதோச நிறுவகத்தின் நாளதுவரையாக்கப்பட்ட மொத்த மற்றும் சில்லறை விலை விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்த போதிலும், பொருளாதார நிலையங்களிலும், லங்கா சதோச நிறுவகத்திலும் சந்தை விலை விபரங்கள் நாளதுவரையாக்கப்படாமை

மற்றும் முறைமையில் காணப்படும் பல்வேறு பிழைகளால் 05 பிரதான சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற தரவுகளை நுகர்வோருக்கு பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை காரணமாக மேற்குறித்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை 3 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இலக்கிடப்பட்ட சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கையை விட உள்ளவாறான சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை 4296 அதாவது 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அசாதாரண வியாபார நுழைவுகளுக்கு எதிராகவும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பிற்குரித்தாக அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு திட்டமிடுதல் மற்றும் அவற்றை செயற்படுத்துவதற்காக அதிகாரசபையின் நிதி சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் தண்டப் பணத்திலிருந்து 2015 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 4,400,000 ஆன மிகை பணத்தை அதிகாரசபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தாமல் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை அதிகாரசபையின் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக சமூகமளித்த உத்தியோகத்தர்களில் பல சந்தர்ப்பங்களில் ஒரே உத்தியோகத்தர் குழுவொன்று சமூகமளிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டதுடன், வெளிநாட்டு சுற்றுலாவிற்காக உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்யும் போது குறித்த சுற்றுலாவின் தன்மையின் பிரகாரம் தகைமையுள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே சந்தர்ப்பங்கள் பகிரப்படும் முறையில் தெரிவு இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) வாகனக் கட்டுப்பாடு | வாடகை வாகனங்கள் வழங்குனர்களைத் தெரிவு செய்வதில் பலவீனங்கள் காணப்பட்டமை மற்றும் குறைவான பயன்பாட்டுடன் வாகனங்கள் காணப்பட்டமை |
| (ஆ) ஊழியர் கடன் கட்டுப்பாடு | ஊழியர் கடன் அறவிடும்போது தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமை, ஊழியர் கடன் காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை |
| (இ) அத்தியவசியப் பொருட்களின் விலைக் கட்டுப்பாடு | (i) மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் மேற்கத்தைய மருந்துகளை விற்பனை செய்யும் கம்பனிகளுக்காக ஒரே விலை வீச்சினை செயற்படுத்துதுல் |
| | (ii) மருந்துகளை அத்தியவசியப் பொருளெனக் குறிப்பிட்டு வர்த்தமானி அறிவித்தல் விநியோகிப்பதற்கு முன்னர் கம்பனிகள் பாரியளவில் விலையை அதிகரித்தமை |
| | (iii) சிறுவர் பால் உணவிற்காக மேற்கொள்ளப்பட்ட விலைக்கட்டுப்பாடு வெற்றியளிக்காமை |
| | (iv) அரிசிக்காக விலைக் கட்டுப்பாட்டினை செய்ய முடியாமை |
| | (v) பொதி செய்யப்பட்ட கோதுமை மாவிற்கான விலைக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்படாமை. |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**<u>நிதிச்சட்டத்தின் பிரிவு ஆம் இல 38 ஆம் ஆண்டின் 1971வு (2)14இன் நியதிகளின்படி2015 , டிசம்பர் இல் முடி 31வடைந்த ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தவிசாளரின் கருத்துரைகள்</u>**

2 **நிதிக் கூற்றுக்கள்**

2.1 **கருத்துரை**

கணக்காய்வாளர் நாயகம் 2.2.1 ,இலுள்ள விடயங்கள் மற்றும் 2015.12.31 இலுள்ளவாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதி ,நிலைமைகள் தவிர்ந்த அரச கணக்கீட்டு நியமங்களின்படி உண்மையானதும் நியாயமானதுமானவற்றினைப் பிரதிபலிக்கின்ற வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தனது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் .

2.2.1 **இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள்**

வாகனங்கள் மீள் மதிப்பீட்டுக்காக கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் 2015.12.31 ,ஆம் திகதியன்று நிதி அறிக்கைகள் ஒத்துசைவாக இணங்கிப் போகாமையினால் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை . மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ,எவ்வாறாயினும்து கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினால் ஆம் ஆண்டின் கணக்குகளில் 2016 .பதிவு செய்யப்பட்டுளது

2.3 **சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

(அ) **ஆம் இலக்க பாவனையாளர்** 09 **ஆம் ஆண்டின்** 2003 **அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின்**19 (2) **ஆம் பிரிவு**

தனியார் மருத்துவ சேவைகளுக்கு உயர்ந்தளவிலான கட்டணங்கள் அறவிடப்படுவது தொடர்பில் விசாரணை செய்து பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு அறிக்கை

சமர்பிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமானது கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இது தொடர்பில் பேரவைக்கு .ஆம் திகதியன்று குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது 2015.11.20

பேரவையின் தவிசாளர் ஆம் திகதியன்று பதவி 2015.11.30 ஆம் திகதியன்று 2015.12.01 விலகியுள்ளதுடன் புதிய தவிசாளரர் .நியமிக்கப்பட்டுள்ளார் புதிய தவிசாளர் ஆம் 2016.02.09 .திகதியன்று இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார் புதிய தலைவர் இது தொடர்பில் தனியார் ,அதனைத் தொடர்ந்து மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களின் ஆம் திகதியன்று கலந்துரையாடலினை 2016.02.23 சங்கத்துடன் அக் கலந .மேற்கொண்டுள்ளார்ுதுரையாடலில் , பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் பிறப்பிக்கப்பட்ட தனியார் சுகாதார நலன் பேணல் சேவைகள் ஆம் இலக்க 17/1918 ஆம் திகதிய 2015.06.11 தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலினை முறையாக அமுல்படுத்துவது .குறித்து கலந்துரையாடப்பட்டது

மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலினை அமுல்படுத்துவது மற்றும் வைத்தியரின் மருந்துச் சிட்டைகளினைப் பதிவு செய்யும் முறை மற்றும் கொடுப்பனவுச் சிட்டைகளில் குறிப்பிடப்படும் கட்டணங்கள் என்பன குறித்த பொறிமுறை தொடர்பில் பிரச்சனைகள் எழுகின்றமையால் இது தொடர்பில் கூடிய விரைவில் இன்னொரு கலந்துரையாடலினை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது .

(ஆ) பதவி விலகியுள்ள அலவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபாதொகையானது ஏற்கனவே அறவீடு -/10,119. 4 இடைநிறுத்தப்பட்ட .செய்யப்பட்டுள்ளது அலுவலர்களிடமிருந்து வருமதியாகவுள்ள பணத்தினை மீளப் பெறுவதற்கான ஆரம்பகட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

3. **நிதிசார் பொழிப்பு**

3.1 நிதிசார் பெறுபேறுகள்

4. **தொழிற்பாட்டுப் பொழிப்பு**

4.1 செயல்நிறைவேற்றம்

(அ) மேலத்தேய மருந்தகங்களின் விலைகளினைக் கட்டுப்படுத்துதல்.

(i)பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 18 (1) இன் கீழ் விதித்துரைக்கப்பட்ட பொருட்களாக மருந்தாக்கல் பொருட்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து , முன்அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது பொருட்களின் விலைகளினை அதிகரிக்க முடியாமையினால் மருந்தாக்கல் பொருட்களின் விலை அதிகரிப்பினை நிறுத்த முடிந்துள்ளதூ ,மேலும் . 18 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பிரிவு ,இல் அதிகாரமளிக்கப்பட்ட தத்துவம்இல்லாமையினால் .குறித்த சட்டம் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது

(ii) கப்பல் தளத்திலுள்ள விலை அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை விலைக்கான ஆகக்கூடிய விலைக்கான கோரப்பட்ட வீதாசாரத்தில் ஆகக்கூடுதலாக %65இலிருந்து குறைநத வீதாசாரத்தினை வழங்குகின்ற முறையானது கட்டுப்பாட்டு விலைகளில் அதிகாரசபையினால் பின்பற்றப்பட்டுள்ளதுஅரச மருந்தாக்கல் ,அதற்கிணங்க . கூட்டுத்தாபனமானது குறைந்த வீதாசாரத்தினைக் சில் ,கோரியுள்ளதால்லறை விலையானது இதற்கான எதிர்காலத் தேவைகளினைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) **தனியார் சுகாதார நலன்பேணல் சேவைகள்**

(i)இது தொடர்பில் எதிர்காலத்தில் உரிய கவனம் செலுத்தப்படும்எதிர்காலத்தில் இது தொடர்பில் ,இதனால் . .உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

(ii)இந்த துறையானது இநத வகையான விலை வகைகளினைக் கருத்தில் கொண்டுள்ளதுடன் அதற்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(இ) **அரிசியின் விலைகளினைக் கட்டுப்படுத்துதல்**

ஒரு கிலோ கிராம் கீரி சம்பா மற்றும் ஒரு கிலோகிராம் நாடு நெல் என்பவற்றிற்கான உத்தரவாத விலைகள் முறையே ரூபா 200 ஆகக்கூடுதலாக .ஆகும் -/45.மற்றும் ரூபா -/50. கிராமிற்குட்பட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையினால் .கி ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் நெல்லினைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டமானது நடைமுறையில் இருந்துள்ளதுஉத்தரவாத விலையிலும் பார்க்க குறைந்த . கிராமை .கி 2000 விலையில் தனியார் வியாபாரிகளினால் விடவும் அதிகமான தொகையில் கொள்வனவு அரசாங்கத்தின் உத்தரவாத ,இதனால் .செய்யப்பட்டுள்ளது விலையின் அடிப்படையாகக் கொண்டுகட்டுப்பாட்டு விலையொன்றினை விதிப்பதனூடாக தனியார் வியாபாரிகள் அதிகளவிலான இலாபத்தினைச் சம்பாதிக்கிறார்கள்.

(ஈ) குழந்தைகளுக்கான பால் உற்பத்திப் பொருட்களினை விலைகளினைக் கட்டுப்படுத்துதல்.

(i),(ii)எதிர்காலத்தில் குழந்தைகளுக்கான பாலுணவுப் பொருட்கள் தொடர்பில் கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

(iii) குழந்தைகளுக்கான பாலுணவுப் பொருட்களின் கப்பல் தள கிரயம் மற்றும் தரையிறக்கிய செலவு என்பன அதன் ஆகக்கூடிய சில்லறை விலையினைத் தீர்மானிப்பதற்கான தேவைப்பாட்டினை இனங்காண்பதற்கான ஆரம்ப கட்ட ஆய்வில் மூலப் பொருள் செலவினை ஆய்வு செய்யும் பொருட்டு தனித் தனியாக ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன ,அத்துடன் . சில்லறை விலை வரையிலான சேர்த்த பெறுமதி கம்பனிகள் பால் .கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் உற்பத்திகள் தவிர்ந்த ஏனைய உற்பத்திகளினை விற்பனை செய்வதால் இந்தப் பெறுமதியானது மற்றைய ,ஆகையால்.ஒவ்வொன்றுடனும் வேறுபட்டிருக்கும் கொள்விலை மற்றும் சில்லறை மற்றும் மொத்த விற்பனை எல்லைகள் வேறுபட்ட வழிமுறைகளிலான பெறுமதியின் கீழ் கணிப்பீடு செய்யப்படுகின்றன .

,வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட பெறுமதி,ஆகையால் இலாபங்கள் மற்றும் சில்லறை மற்றும் மெத்த விற்பனை இலாப எல்லை என்பனவற்றின் வருமதியானது கிரயத்தில் உள்வாங்கும் வழிமுறைக்கமைவாக வேறுபட்டதாக அமைந்திருந்தமையால் கம்பனிகளினால் அவற்றிலிருந்து அறவிடப்பட்ட தொகையினைப் பற்றிய தகவலினைப் பெற்றுக் கொள்ள முடிந்திருந்துஎவ்வாறாயினும் அத்தகைய தொகைகள் . ,ஆகையால் .நியாயப்படுத்தப்பட முடியாதவை பொதுவான கிரய கணக்கீட்டு முறைமைகளின் அங்கீகரிக்கப்பட்ட முறைமையினூடாக இலாப எல்லையினை வீதாசாரங்களை அறிமுகப்படுத்துவதனூடாக அதிகாரசபையினால் ஆகக்கூடிய சில்லறை விலையினைத் தீர்மானிக்குகையில் அதற்கமைய ஆக்கூடிய சில்லறை விலை கணிப்பிடப்படும் ,அதன்பின்னர் . அதிகாரசபையானது அத்தகைய விலைகளினை வினைத்திறன் வாய்ந்ததும் பயனுறுதி வாய்ந்ததுமாக மாற்றியமைப்பதற்கு கம்பனிகளுடன் பேச்சவார்த்தைகளில் ஈடுபட்டதுடன் விலைக் கட்டுப்பாட்டு முறைமையினை நடைமுறைப்படுத்த முடிந்தது.

(உ) **கொழுப்பு நீக்கப்பட்ட பால்மாவின் விலைகளினைக் கட்டுப்படுத்துதல்**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படிஇவற்றின் விலைகள் உயர்வடையும் போது , மாத்திரம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முன் .அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் இவற்றின் விலைகளில் எவ்வித தளம்பலுமிருக்காவிடின்

அதிகாரசபையானது எவ்வித தலையீட்டினையும் மேற்கொள்ளாது .

(ஊ) **பெற்றோலிய எரிவாயுவின் விலைகளினைக் கட்டுப்படுத்துதல்**

நவம்பரின் பின்னர் விலைகளினைக் கணிப்பீடு 2012 செய்வதற்குத் தேவையான தகவலினை ஒரு கம்பனி 2013 .வழங்கியிருக்கவில்லைஜனவரியில் அதிகாரசபையானது மத்தியஸ்தருக்கு பொதுத் திறைசேரியானது இந்தக் கம்பனியின் விலை வாய்பாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து ,அரசாங்க கொள்கை என்றவகையில் , 2014டிசம்பரிலிருந்து பொதுத் திறைசேரியனால் எரிவாயிவின் விலையினை வெளிப்படுத்துவது தொடர்பில் அதிகாரசபையானது அந்த விலையினைச் சட்டரீதியானதாக்கும் பொருட்டு வர்த்தமானி அறிவித்தலினூடாக அன்றிகடிதமொன்றினூடாக , .அறிவித்துள்ளது

(எ) **பிஸ்கற்றுக்களின் விலைகளினைக் கட்டுப்படுத்துதல்**

அதிகாரசபையின் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் போட்டி ஊக்குவிப்பு பிரிவின் பரிந்துரைகள் தொடர்பில் பிஸ்கற் தயாரிப்பாளர்களுடன் சந்திப்பினை மேற்கொண்டிருந்தனர்விதித்துரைக்கப்பட்ட ,அதன்பின்னர் . பொருளாக பிஸ்கற்றின் பெயரை குறிப்பீடு செய்வது .தேவையற்றது எனத் தீர்மானிக்கப்பட்டது

(ஏ) **முச்சக்கர வண்டிகளின் கட்டணங்களினை கட்டுப்படுத்துதல்**

மானிகள் தொடர்பான கொள்கை வகுப்புக்களினை ஆய்வு செய்யும் அதிகாரமானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கல்லையின் கீழ் தொழிற்பட்டு வரும் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதுமுச்சக்கர . வண்டிகளில் மானிகளினைப் பொருத்துவது கட்டயமாக்கப்படாதுள்ள போதிலும் முச்சக்கர வண்டிகளில் மானிகளினைப் பொருத்துவது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கைகளினை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) **குடிநீர் பொத்தல்களின் விலைகளினைக் கட்டுப்படுத்துதல்**

(i) பாவனையாளர் அலுவல்கள் அதகாரசபையானது சந்தையிலுள்ள பல்வேறு உணவுப் பொருட்களின் மாதிரிகளினை எழுமாற்றாக செவ்வை பார்க்கின்றது.அதற்கிணங்ககுடி நீர்ப் போத்தல்களினைச் , சோதனையிடுவது தொடர்பில் விசேட கவனம் .செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்

(ii) ஆ 30 ஜூலை 2014ம் திகதியன்று அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆய்வு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட குடிநீர்ப் போத்தல்களின் ஆகக்கூடிய சில்லறை விலைகளின்படி , PET போத்தல்களின் மீது தயாரிப்பு விலை குறித்த லேபல் ஒட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் விலையினைத் தீர்மானிப்பது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன .

(j) கோதுமை மாவின் விலையினைக் கட்டுப்படுத்துதல்

ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2016.07.14 கோதுமை மா பைக்கற்றுக்களின் விலையினைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவித்தல்விடுக்கப்பட்டது.

(k) **<u>பாவனையாளர் சேவைகளினை விசாரணை செய்வது தொடர்பான கருத்திட்டம்</u>**

(i)பாவனையாளர் சேவை விசாரணைகள் தொடர்பான கருத்திட்டமானது விவசாயிகள் மற்றும் பாவனையாளர்களுக்கு மொத்த வியாபார மற்றும் சில்லறை விற்பனை தொடர்பான தகவல்களை வழங்கும் பொருட்டு இல் 1977ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் ஒரு பகுதியாக அதனைத் தொடர்ந்து தகவலுக்கான விரைவு அழைப்பு சேவையினை ஆரம்பித்துள்ளது ,தற்போது. அதிகாரசபையானது அதன் குறைபாடுகளை இனங் கண்டுள்ளதுடன் இந்த கணனி முறைமையினைத் தயாரித்துள்ள ரெலிகொம்மின் இணைக்கப்பட்ட நிறுவனத்துடன் நடவடிக்கைகளினை துரிதமாக்குவதற்கும் அதைனை மேம்படுத்துவதற்கும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ii) இந்த முறைமையினை விருத்தி செய்யும் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைபொருளாதார நிலையங்கள் மற்றும் , லங்கா சதொச என்பன ஒரேகட்டிடத்தின் கீழ் தொழிற்படுவதுடன் ஒரே வரிசை அமைச்சின் கீழும் தொழிற்பட்டனதற்போது . இத்தகைய மூன்று நிறுவனங்களும் இரண்டு அமைச்சுக்களின் கீழ் தொழிற்பட்டு வருவதுடன் தொழிற்பட்டு வரும் இடங்கள் மாற்றமடைந்துள்ளதால் ஒருங்கிணைப்பு நடவடிக்கையானது இடர் மிகுந்ததாக மாற்றமடைந்துள்ளதுஇத்தகைய மாற்றங்களின் . காரணமாக அவற்றினை இற்றைப்படுத்துவது தொடர்பில் சில இவற்றிற்கான ,எவ்வாறாயினும் .குறைபாடுகள் எழுந்துள்ளன உடனடி நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(l) ,பல்வேறுபட்ட பகுப்பாய்வுகளின் அடிப்படையிலான உரிய ந அலுவலர்களுக்கு நெறிப்படுத்துவதற்காக இலுள்ள திடீர் 2016 வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் சோதனைகளுடன் தொடர்புடையதான நோக்கங்களினை

.அடைவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்

4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

(அ) 2015..ஆம் திகதின்று முதலீடு செய்யப்பட்டுள்ளது 12.31

5. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

இத்தகைய முறைமைகளினைக் கட்டுப்படுத்துவதிலுள்ள குறைபாடுகளினைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

ஹசித்த திலகரத்ன
**தவிசாளர்**